Registered in Ceylon as a Newspaper

VOUCHER COPY

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் யாழ்ப்பாணம் சுபகிருது வைகாசி 4 ஆம் நாள் துல்ஹஜ் 12 (17-5-62) வியாழக்கிழமை இதழ் 95

சட்டவிரோதக் குடியேற்றம்

# “ இந்தியர் பிரச்னையை கஷ்டமாக்கிவிட்டது

## இலங்கையர் மயக் கொள்கை இந்தியரைப் பாதித்துள்ளது ”

### இந்திய துணை மந்திரி திருமதி மேனன் கருத்து

புதுடில்லி, மே 16

தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களினால், இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது கஷ்டத்தை அளித்துள்ளது என்று வெளிநாட்டு விவகாரங்களுக்கான இந்திய ராஜாங்க மந்திரி ஸ்ரீமதி லக்ஷ்மி மேனன் கூறினர்.

வெளிநாடுகளிலுள்ள இந்தியாகள் விஷயமாக இந்திய அரசாங்கம் பராமுகம் காட்டுவதர்கக் கூறப்படும் புகார்கள் உண்மையல்ல என்றும்தெரிவித்தார்.

பர்மாவிலும், இலங்கையிலுமுள்ள இந்திய சமூகத்தினா. அனுதரவான நிலையில் இருக்கிறார்கள் என்றும், அவர்களின் உரிமைகளையும், சொத்துக்களையும் காப்பாற்ற இந்திய அரசாங்கம் தவறிவிட்டதென்றும் ஜனசங்கத் தலைவர் திரு. யு. எம். திரிவேதி கூறியதை ஸ்ரீமதி மேனன் மறுத்தார்.

இலங்கையிலுள்ள இந்தியர்கள் வெளியேற்றப்படாமலிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என முஸ்லிம் லீக் அங்கத்தினர் ஜனுப் முகம்மது கோயா வற்புறுத்தினர்.

“தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதக் குடியேற்றம் இருந்துவருவதால், அங்குள்ள இந்திய வம்சாவளியினரின் பிரச்சினையைத் தீர்ப்பது மிகவும் கஷ்டத்தை அளித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் “இலங்கையர்மய”க்கொள்கை அங்குள்ள இந்தியர்களைப் பாதித்திருப்பது உண்மைதான்” எனவும் ஸ்ரீமதி மேனன் கூறினர்.

லோகசபையில் காங்கிரஸ் அங்கத்தினர்களும், எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் பற்றிய அரசாங்கத்தின்கொள்கையைக் கண்டனம் செய்தபோது ஸ்ரீமதி மேனன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

## சர்வகலாசாலை பௌத்த விகாரைக்கு

### மந்திரி அடிக் கல் நாட்டுவார்

கொழும்பு, புதன்

பேராதனை சர்வகலாசாலையில் கட்டப்படவிருக்கும் புதிய பௌத்த விகாரைக்கான அடிக்கல் நாட்டுவிழா நாளை நடைபெறும்.

உள்நாட்டுக் கலாசாரமந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா நாளை பிற்பகல் 3-55க்கு இந்த அடிக்கல்லை நாட்டுவார்.

## கொழும்பில் பெருமழை

### வெள்ளத்தினல் 400 பேர் வீடிழந்தனர்!

கொழும்பு, புதன்

நேற்றுக்காலை தொடக்கம் இன்று காலை வரை பெய்த மழை காரணமாக கொழும்பு நகரசபைப் பகுதிக்குள் பல மக்கள் தங்கள் வீடுகளை இழக்க நேரிட்டது. பல பட்டணங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்கள் தொடர்ந்து மழை பெய்கிறதெனக் கூறுகின்றன. பல முக்கிய வீதிகள் வெள்ளத்திலாழ்ந்துள்ளன. கொழும்பு நகரத்தில் வனத்த. முல்ல பகுதி வெள்ளத்துக்குள்ளான காரணத்தால் 400 பேர் வீடிழந்தனர். வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டோர் தர்மக் கமிஷனரை உதவி கோரியுள்ளனர்.

மக்காதி தெருவில் மந்திரிகளுக்கென கட்டப்பட்டிருக்கும வீட்டில் வசிக்கும் மந்திரிகள் தொடர்ந்து மழை பெய்ததினல் தங்களது வீட்டு முற்றமெல்லாம் வெள்ளம் வந்துவிட்டதென்றும் அதனல் நேற்றிரவு முழுவதும் தங்களுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## 4 தமிழ் எம். பி. க்கள் மீதான வழக்கு

### ஜூலை 9ம் தேதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

நான்கு தமிழரசுக் கட்சி எம் பி.ககள் உட்பட 5 பேர்கள் மீதான வழக்கு மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு மாற்றப்பட வேண்டுமென்ற விண்ணப்பம் இன்னும் சுப்ரீம் கோர்ட்டில் அப்படியே இருக்கிறது.

திரு. அமிர்தலிங்கம் எம். பி., டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் எம். பி., திரு, வி. ஏ. கந்தையா எம். பி., திரு. வி. தர்மலிங்கம் எம். பி., மல்லாகத்தைச் சேர்ந்த திரு. எஸ் நடராசா ஆகியோர்மீது யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தொடரபபட்ட இவ்வழக்கு அட்டோர்னி ஜெனரலின் “பாயிண்ட்”டின் மீது கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டு, கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. டி. கியூ எம். சிரிமானே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

சட்டவிரோதமாகக் கூடியதாயும், யாழ்ப்பாணம் கச்சேரி

(5-ம் பக்கம் பார்க்க)

## “ ஜூன் 5-ல் ஹர்த்தால் அனுஷ்டியுங்கள் ”

### தமிழ்ப் பேசும் மக்களுக்கு எஸ். ஜே. வி. வேண்டுகோள்

கொழும்பு, புதன்

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களை அழித்தொழிக்க அரசாங்கம் அடுக்கடுக்காகக் கொண்டுவந்த அநியாயச் சட்டங்களுக்கு ஏகோபித்த எதிர்ப்புத் தெரிவுக்கு முகமாக ஜூன் மாதம் 5-ந் திகதியன்று தமிழ்ப் பகுதிகளில் அமைதியான முறையில் ஹர்த்தால் அனுஷ்டித்து துக்கம் கொண்டாட வேண்டும். என்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு. செல்வநாயகம் தமது வேண்டுகோளில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தமிழ்ப் பேசும் மக்களுக்கு இந்த நாட்டில் இழைக்கப்பட்டு வந்த அநீதிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. இத்தினத்தில் தான் கொழும்பு கால்பேஸ் திடலில் தமிழ்ப் பேசும் பிரதிநிதிகளும் சத்யாக்கிரகிகளும் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர்.

1958–ம் ஜூன் மாதத்தில் இதே தினத்தில் தான் தமிழ்ப் பேசும் தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டனர்.

அநீதியான சட்டங்களை எதிர்த்து தமிழ்ப் பேசும்மக்கள் உரிமைப் போர்தொடுத்த இந்த நன்னளில் தமிழ்ப்பேசும் மக்கள் எதிர்ப்பை அமைதியான முறையில் உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டும் இத்தினங்களை அனுஷ்டிப்பதால் தமிழ்ப் பேசும் மக்களுக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டுவதாகவிருக்கும், தைத்தான் இந்திய உபகண்டமும் செய்துவந்தது.

1962-ம் ஆண்டு ஜூன் 5-ந் திகதியன்று ஸ்தலஸ்தாபன சபைகள், வர்த்தக ஸ்தாபனங்கள், கல்லூரி ஆசிரியர்

(5-ம் பக்கம் பார்க்க)

# நாட்டு முன்னேற்றத்திற்கு

## முப்படைச் சேவையின் அவசியம்

### செனட்சபையில் பிரதமர் விளக்கம்

கொழும்பு, புதன்

நாட்டின் முன்னேற்றத்துக்கு முப்படைகளையும் உபயோகிக்கலாமென்றும் இவ்விதம் உபயோகப்படுத்துவதால் முன்னேற்றத் திட்டங்கள் துரிதமாக செயல்பட இது உதவுமென்றும், மராமத்து பகுதிகளில் தொழில்நுட்ப வல்லுனர்களின் பற்ருக்குறையை இது ஓரளவு தீர்க்க வகைசெய்யுமெனவும் இன்று செனட்டில் இராணுவ சட்டதிருத்த மசோதா மீதான விவாததத்தின் பேசிய பிரதமர் தெரிவித்தார்.

செனட்டர் விஜயசிங்காவின் தலைமையில் இன்று பிற்பகல் செனட் சபை கூடியபொழுது சாம் பி. ஸி. பெர்னண்டோ பிறிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்வதற்காகவுள்ள சட்டத்தில் மாற்றம் உண்டுபண்ணுவதற்கான மசோதாவைச் சமர்ப்பித்தார்.

அதையடுத்துப் பிரதமர் இராணுவ சட்டதிருத்த மசோதாவின் 2 வது வாசிப்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். கடற்படை, விமானப் படை ஆகியவற்றின் திருத்த மசோதாக்களும் இராணுவ திருத்த மசோதாவுடனேயே சேர்த்து விவாதத்துக் கெடுத்துக் கொள்ளப் பட வேண்டுமெனப் பிரதமர் விளக்கம் தெரிவித்தார் எல்லாம் ஒரு விடயத்தை யொட்டியே அமைந்திருப்பதால் எல்லாம் ஒரு முறையிலேயே விவாதிக்கப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டினர்.

இம் முப்படையின் சேவைகளை நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தப்பட வேண்டுமென்பதே அரசாங்கத்தின் கொள்கை என்றும் ஆனல் அவசர காலத்திலன்றி, இககொள்கையை நடைமுறைக்குக்கொண்டுவரத்தற்போதய இராணுவச் சட்டம் இடமளிக்க வில்லையென்றும் பிரதமர் தெரிவித்தார். இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ள சட்டமாற்றங்கள் தங்கள் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்கு முதல் நடவடிக்கை என்றும், நாட்டின் முன்னேற்றத் திட்டங்களில் சேவை புரிய படைவீரர்கள் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்றும் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா கூறினர்.

படைகள் ஈடுபடக் கூடிய மிலிட்டரி அல்லாத வேலைகள் சிலவற்றைப் பற்றி பிரதம மந்திரி விளக்கிக் கூறினர்.

உதாரணமாக மராமத்து அமைச்சிற்கு தொழில் நுட்ப அதிகாரிகள் பொறியியல் நிபுணர்கள் போன்றவர்களின் பற்ருக்குறை ஏற்பட்டுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்

சுபகிருது ஆண்டு வைகாசித் திங்கள் 4-ம் நாள் வியாழக் கிழமை (17-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1381, துல்ஹஜ்ஜு மாதம் 12-ம் பிறை.

இன்று மாலை 5-20 வரை திரயோதசி. பின்னர் சதுர்த்தசி. பகல் 2-27 வரை சித்திரை. இதன் பின் துவாதசி, சித்தாமிர்தயோகம். பிரதோஷ விரதம், இராகுகாலம்.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருசீரிடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சிநாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

சித்திரை - சுவாதி: அனுவசிய யோசனை, பெரியோர் எதிர்ப்பு, நண்பர் உதவி, தொழில் உணர்ச்சி, பிதாவழி நினைவு.

மேடம்: பிரயாணசுகம், வர்த்தக நன்மை, குடும்பசுகம், போஷன சுகம்.

இடபம்: இனசன கொண்டாட்டம், செலவு அதிகம், வாக்குவெற்றி, வித்தைச் சிறப்பு.

மிதுனம்: கடும் உழைப்பு, பலிதக்குறைவு, தொழில் விருத்தி, பணவரவு.

கடகம்: ஊழியர்உதவி, குடும்பசுகம், பெரியோர் உதவி, செய்காரிய அனுகூலம்.

சிங்கம்: பிதாவழி உதவி, அவசரப் பேச்சு, சகோதரர் பகை, தொழிற் கேடு.

கன்னி: நல்லோர் நட்பு, தொழிற் சிறப்பு, பணவரவு, மதிப்புயர்ச்சி.

துலாம்: கடன்வரவு, பெரியோர் வருகை, தொழிற்சிறப்பு, யோசனை.

விருச்சிகம்: நண்பர் உதவி, தொழில் நன்மை, கடன்வரவு, நாணயவிருத்தி.

தனு: தாயாதிகள் கலகம், குடும்பசுகக்குறைவு, மனச சஞ்சலம், பணமுடை.

மகரம்: நற்செய்தி, பிரயாணம், செய்காரியமுயற்சி, பணவரவு.

கும்பம்; சகோதரர் உதவி, தொழில்நலம், மதிப்புயர்ச்சி, மனஉறுதி.

மீனம்: பணவசதி, செலவு அதிகரித்தல், சுபசெய்தி, தொழிற் சுகம்.

---

கராச்சி, மே 16

பழைய டெல்லியில் சென்ற திங்கட்கிழமை ஒரு எறிகுண்டு வீசப்பட்டதில் ஐவர் கொல்லப்பட்டனர் என்று இங்கு கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.


## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15.50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்.
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

### தேவை

மோட்டார்கரேச்சுக்கு வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. 2 மெக்கானிக், 4 ரிங்கேர்ஸ், 1 பெயின்ரர், 1 ஸ்பிறே பெயின்ரர். கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

BEMMOTO
C/o Mrs. A. C. Benjamin,
No. 3, Second cross street,
Jaffna.


# பண்டாரநாயகா கொலை வழக்கு

## பிரிவி கவுன்சிலில் நடைபெற்றது

லண்டன், மே 15

திரு! எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைச் சுடுவதற்கு உபயோகிக்கப்பட்ட துப்பாக்கியின் அடையாளம் பற்றி சுப்பிறீம் கோர்ட்டு விசாரணையின் போது எதிரிகளின் சந்தேகம் ஜூரர்களுக்கு அறிவிக்கப்படவில்லையென பிரிவிக் கவுன்சிலில் அறிவிக்கப்பட்டது. பண்டாரநாயக்கா கொலைவழக்கு பிரிவிக் கவுன்சில் அப்பீல் விசாரணை நேற்று இக்கு ஆரம்பமானது.

பண்டாரநாயக்கா கொலை சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மபிட்டிக்கம புத்தரகித்தர, எச். பி. ஜயவர்த்தனை டல்டுவ சோமராமய ஆகியோர் பிரிவுக்கவுன்சிலுக்கு அப்பில் செய்திருந்தனர்.

இலங்கை கிரிமினல் அப்பில் கோட்டு, சுப்பிரிம் கோர்டில் மூவருக்கும் வழங்கப்பட்ட மரணதண்டனையை மாற்றி, முதல் இருவருக்கும் ஆயுள் காலச் சிறைத் தண்டனை விதித்வது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

புத்தர கிததரவுக்கும் ஜயவர்தனவுக்கும் திரு. ஈ. ஜி. விக்ரமநாயக்காவும், சோமராமாவிற்கும் திரு. டிஸ்கில் பூரட், திரு. டிக் தாபேன், திரு. அன்சிலி பெரேரா ஆகியோரும் ஆஜாரானர்கள் திரு. நில்லோசன் கியு. சி. திருரு ஸ். மில்னர் எல். பி. டி. பிரேமரத்ன ஆகியோர் முடிக்குரிய வழக்கறிஞர்களாவார்கள்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## யாழ்ப்பாணம் மாநகரசபை

யாழ்ப்பாணமாநகரசபையின் நிர்வாகத்தைத் திருப்தியாக நடத்துவதற்குக் கட்சிக் கோளாறுகளே தடையாகவிருக்கின்றன. அத்துடன் முன் அதிகாரத்தில் இருந்தவர்கள் வேண்டப்படாத நியமனங்கள் செய்தமையினுல் மாநகரசபைப் பணம் வீணகச் செலவழிக்கப்படுகிறது. திரு. கதிரவேலு பொன்னம்பலம் சிலநாளைக்கு முன் பத்திரிகையில் அறிவித்தபடி நியமனங்கள் எழுபத்தைந்து வீதம் குறைக்கபபட வேண்டும். அப்படிச்செய்தால் வருடந்தோறும் ஐம்பதாயிரம் ரூபாய் மிஞ்சும். நகரத்தைச் செவ்வனே சீர்திருத்தலாம். இதற்கு எவ்வித முறைகளைக் கையாளலாம் என யோசித்தல் அத்தியாவசியம். அரசியல் தலையீடில்லாத அங்கத்தவர்களின் தலைவர் ஒருவராலேயே நிர்வாகத்தை நடத்தமுடியும். அத்துடன் அங்கத்தவர்கள் தலைமைப் பதவிக்கு ஆசைப்படலாகாது. அப்படியானல் தான் நேர்மையான நிர்வாகத்தை நடாத்தமுடியும். இப்பொழுது மாநகரசபையில் மூன்று பலமான கட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்சியும் அதிகாரத்தில் இருக்க ஆசைப்படுகிறது இந்த ஆசை நகர நிர்வாகத்தைச் சீர்குலைத்துவிட்டது. மாநகரசபையின் உள்ளும் புறமும் ஊழல் தாண்டவமாடுகிறது. இதையிட்டு ஒரு பத்திரிகை அத்தாட்சிகளோடு பொதுமக்களுக்கறிவித்தது. சம்பந்தப்பட்டவர்கள்மீது உடன் விசாரணை நடத்துமாறு நான் மாநகரசபை ஆணையாளருக்கு அறிவித்துள்ளேன். இந்த நிலையில் யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவரின் கௌரவத்தைக் காப்பதற்கு உள்ளூராட்சி மந்திரி ஒரு கமிஷனை நியமித்து ஊழல்களை விசாரணைசெய்யவேண்டும். அத்துடன் இச் சபையை உடனடியாகக் கலைத்து மக்களின் விருப்பத்தை அறிய ஒரு தேர்தலை மூன்று மாதத்தினுள் நடத்தவேண்டும். இது மக்கள் அரசாங்கம் மக்களின் மனப்பான்மையை இப்படியான நிலையில் அறிவதுதான் ஜனநாயகமுறை. எல்லா அங்கத்தவர்களுக்கும் இப்போதைய நிலையில் தங்களின் பதவிகளைத் துறப்பார்களா? ஏனையோர் ஆயத்தமானல் முதலாவது ராஜினமாக் கடிதத்தைக் கொடுப்பதற்கு நான் தயார். பதவி பெரிதல்ல சேவை தான் பெரிது.

கே. எஸ். நடராசா
எம். எம். ஸி.

அரியாலை,
யாழ்ப்பாணம்.

---

## நியூ சட்டில் கோஷ்டி வெற்றி

களுத்துறை, செவ்வாய்

நியூசட்டில் தோட்டத்து கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும், கட்டுக்குருந்தை பாடசாலைக்கோஷ்டிக்கும், நியூசட்டில் தோட்டத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் 2-1 ஆட்டங்களால் நியூசட்டில் கோஷ்டி வெற்றி பெற்றது. நாபொடை கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும், நியூசட்டில் கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் 2-1 ஆட்டங்களால் நியூசட்டில் வெற்றிபெற்றது.

---

## டாக்டர்கள் பற்றுக்குறைக்கு நிவர்த்தி

கொழும்பு, புதன்

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலவிவரும் டாக்டர்கள் பற்றுக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 65 வயதிற்குக் கீழ் உள்ள இளைப்பாறிய டாக்டர்களை மனுச் செய்யுமாறு சுகாதார இலாகா கேட்டுள்ளது. 60 வயதில்டாக்டர்கள் கட்டாயமாக இளைப்பாற வேண்டும் என்று இருந்தும், இப்படிச் செய்வது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சுகயீன காரணமாக இளைப்பாறிய டாக்டர்களின் மனு, இளைப்பாறி ஒருவருடம் ஆகியிருந்தால் தான் ஏற்றுக்கொள்ளப்படும். இவர்கள் வேலைக்கு எடுக்கப்படுவதற்கு முன்னர் வைத்திய சபையொன்றினல் பரிசோதிக்கப்படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் டாக்டர்கள், தாம்வாழும் இடங்களுக்கு அருகாமையிலுள்ள அரசாங்கவைத்திய நிலையங்களில் மணித்தியாலத்திற்குப் பத்து ரூபாவீதம் வேலைசெய்வார்கள். இவர்கள் நிர்வாகவேலைகளைக் கவனிக்க முடியாது. இவர்கள் காலை 8மணிதொடக்கம்11மணி வரையும், மாலை 3மணிதொடக்கம் 5மணிவரையுமே வேலை செய்வர்.

---

## கூடையில் களவு

களுத்துறை, புதன்

யட்டதொல சந்தியில் வியாபாரம்செய்யும் எஸ். சின்னையா என்பவரின் கடையில் இனமறியாத சிலர் இரவில் கூரையை பிரித்துக்கொண்டு உள் சென்று 700 ரூபாயையும் பெறுமதியான நகைகளையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இதுசம்பந்தமாக பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.


அம்மா எனக்கு தினந்தோறும் மாமைட் தருகிறதால், வகுப்பிலும் விளையாட்டுக் களத்திலும் நான் சுறுசுறுப்பாய் இருக்கிறேன்



நாம் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறோம். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய்இருக்கிறோம். பலத்திற்கும் வீர்யத்திற்கும்உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும் போழுது அதிகக் டியானருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மார்மைட் பி வர்க்க
விட்டமின்களை
ஏராளமாகக் கொண்ட
ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

# அமெரிக்க 'ஜெட்' போர் விமானங்கள் தாய்லாந்தில் இறங்கின

## துருப்புக்களும் அதிகரிக்கப்படும்
## தாய்லாந்தின் சுதந்திரத்தை பாதுகாக்கும் நடவடிக்கையாம்

லண்டன், மே 16

**லாவோசில் கம்யூனிஸ்டுகள் முன்னேறிச் செல்வதைத் தொடர்ந்து தாய்லாந்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அமெரிக்க ஜெட் போர் விமானங்கள் தாய்லாந்தில் இறங்குகின்றன.**

அமெரிக்க ஏழாவது கடற்படை அணியின் துருப்புக்கள் நாளை தாய்லாந்தில் இறங்கும். 'சியாட்டோ' படைகளின் ஒத்திகைக்காக தாய்லாந்துக்குச் சென்றிருந்த ஆயிரம் துருப்புக்களுடன் இந்த அணியும் சேர்ந்து கொள்ளும். தாய்லாந்திலுள்ள அமெரிக்கத் துருப்புக்களின் எண்ணிக்கையை ஐயாயிரமாக அதிகரித்து புதிய தலைமையின்கீழ் வைப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

தாய்லாந்துக்குப் படைகளை அனுப்பும் நடவடிக்கை ஐ. நா. சாஸனத்துக்கு முரணானதல்ல என்று அமெரிக்க ஜனாதிபதி கென்னடி நேற்று விடுத்த ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"தாய்லாந்தின் தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக தாய்லாந்தின் அழைப்பின்படி அமெரிக்கப் படைகள் அனுப்பப்படுகின்றன. இது ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகும்" என்று ஜனாதிபதி கென்னடி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

லாவோஸ் சம்பந்தமான அமெரிக்கக் கொள்கைகளில் மாறுதல் இல்லையென்றும் லாவோசை ஒரு நடுநிலைமை நாடாக்கவும் அங்கு தேசிய கலப்பு அரசாங்கம் அமையவும் அமெரிக்கா தொடர்ந்து முயற்சி செய்துவரும் என்று ஜனாதிபதியின் அறிக்கை கூறுகிறது.

தாய்லாந்துக்குப் படைகளை அனுப்புவதுபற்றி ஐ. நா. தலைமைக் காரியதரிசிக்கு அறிவிக்கப்பட்டதாகவும் தென்கிழக்காசிய நாடுகளுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டதாகவும் ஜனாதிபதி கென்னடி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ராஜாங்க மந்திரி–ரஷ்ய தூதர் சந்திப்பு

அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் றஸ்க் சோவியத் ஸ்தானிகரைச் சந்தித்து லாவோஸ் நிலைமை குறித்துப் பேசினார்.

லாவோசின் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா சனிக்கிழமை லாவோஸ் திரும்புகிறார்.

அமெரிக்கா நேரடியாக லாவோசில் தலையிடுவது மோசமான விளைவுகளை ஏற்படுத்துமென சுவன்னபூமா தெரிவித்தார்.

### பிராவ்டா கண்டனம்

தாய்லாந்துக்கு அமெரிக்கா படைகள் அனுப்பியதை சோவியத் பத்திரிகையான 'பிராவ்டா' இன்று கண்டித்தது.

## சலான் மீது விசாரணை ஆரம்பம்

பாரிஸ், மே 16

அல்ஜீரிய விடுதலையை எதிர்க்கும் ஐரோப்பிய இரகசிய ராணுவ ஸ்தாபனத்தின் தலைவராக விளங்கிய முன்னாள் பிரஞ்சு ஜெனரல் சலான் மீது நேற்று பாரிசில் ராணுவ நீதிமன்றம் ஒன்றின் முன் விசாரணை நடைபெற்றது.

இந்த நீதி மன்றத்துக்கு இக்குற்றச் சாட்டு பற்றி விசாரணை நடத்த அதிகாரமில்லையென்று ஜெனரல் சலான் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வாதாடினர்.

## பெட்ரோலியம் கார்ப்பரேஷன் சேவை விஸ்தரிப்பு
### யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மன்னார் பகுதிகளில் குதங்கள் எடுக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனம் தனது 3-வது விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் மேலும் 50 பெட்ரோல் குதங்களை எடுப்பதற்கான முன்னறிவித்தல் கொடுத்துள்ளது.

தற்போது எடுக்கப்படவிருக்கும்குதங்களில் அதிகமானவை யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மன்னார் ஆகிய பகுதிகளிலுள்ளவைகளே.

32 பெட்ரோல் நிலையங்கள், 18 மண்ணெண்ணை டிப்போக்கள், 16 அரசாங்க பெட்ரோல் சேமித்து வைக்கும் டாங்கிகள், 8 இ. போ. ச. டிப்போக்கள், 2 பெரும் டாங்கிகள் ஆகியவற்றையும் பொறுப்பேற்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்யவும் இன்று கார்ப்பரேஷன் நடவடிக்கை எடுத்துள்ளது.

---

## போர்ச்சுக்கீஸியர் அனுப்பப்பட்டனர்

புதுடில்லி, மே 16

கோவா, டாமன், டையூ ஆகிய பகுதிகளில் காவலில் வைக்கப்பட்டிருந்த போர்ச்சுக்கீஸிய சிப்பாய்களும் சிவில் அதிகாரிகளும் போர்ச்சுக்கலுக்குத் திருப்பி அனுப்பும் வேலைகள் முடிவடைந்துவிட்டன.

பம்பாயிலிருந்து விமானத்தில் கராச்சிக்கு இவர்கள் அனுப்பப்பட்டனர்.

இம்மாதம் 2-ந் திகதி ஆரம்பமான இந்த வேலை நேற்றுடன் முடிவடைந்தது. மொத்தம் 4600 பேர் அனுப்பப்பட்டனர். கோவாவின் கடைசி போர்ச்சுக்கீஸிய கவர்னரும் நேற்றுக் கடைசியாகச் சென்ற விமானத்தில் அனுப்பப்பட்டார்.

---

## வியாபாரிமூலை கொலைவழக்கு
### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

பருத்தித்துறை, செவ்வாய்

புலோலி மேற்கு வியாபாரிமூலையைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி சிவகுரு என்பவரை கொலைசெய்ததாக முகமட் கனிபா என்பவர்மீதும் அவரது சகோதரியின் கணவர் முத்தையா குமாரலிங்கம் என்பவர்மீதும் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சபாபதிப்பிள்ளை மயில்வாகனம் சாட்சியமளித்தபின் சபாபதிப்பிள்ளை கனகசூரியர், ஆறுமுகம் முருகுப்பிள்ளை ஆகியோர் தமது சாட்சியங்களில் 2-ம் எதிரி காலஞ்சென்றவரை கட்டிப் பிடிக்க முதல் எதிரி கிறிஸ்கத்தியால் குத்தியதைக் கண்டதாகக் கூறினர்.

நீதிபதி விசாரணையை முடித்து எதிரிகளை சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்கும்படி உத்தரவிட்டு வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினர்.

---

## சுகாதார வாரவிழா

பருத்தித்துறை, செவ்வாய்

ஆனி மாதம் 2-ம் திகதி ஆரம்பமாகி 9-ம் திகதியுடன் முடிவடையும் அகில இலங்கைச் சுகாதார வாரக்கொண்டாட்டத்தை வடமராட்சிப் பகுதியில் சகல பட்டின, கிராம சபை எல்லைகட்குள் தனித்தனிசபைகளை நிறுவி விசேடமாகக் கொண்டாடுவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகப் பகுதிச் சுகாதார பரிசோதகர்கள், பாடசாலைகள், சனசமூக, கிராம முன்னேற்றச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு பொதுக்கூட்டம், கதம்பவிழா, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடாத்த ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

## பிராணவாயு உட்செலுத்த 'முதல் உதவி' சாதனம்
### ஜெர்மன் செஞ்சிலுவை சங்கம் ஏற்பாடு

மூனிச், மே 16

சில நோயாளர்களுக்கு பிராணவாயு உடனே உட்செலுத்தினால் அவர்கள் உயிர் பிழைக்கக்கூடும் என்ற நிலைமை இருக்கலாம். அவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்போது அவர்கள் மரணமடையலாம். நோயாளி இருக்கும் இடத்திற்கே வெகு சீக்கிரத்தில் பிராணவாயு உட்செலுத்தும் சாதனம் கொண்டு வரப்பட்டு பிரயோகிக்கப்படுமானால் நோயாளி உயிர் பிழைக்கமுடியும்.

ஜெர்மன் செஞ்சிலுவைச் சங்கம் பிராணவாயு விநியோகம் செய்யும் சாதனத்தைக் கொண்ட அம்புலன்ஸ் வண்டி ஒன்றை முதல் உதவி அளிப்பதற்காக ஏற்படுத்தியுள்ளது. இம்மாதிரியான ஏற்பாடு வேறு எங்குமே இல்லை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். விபத்தில் சிக்கியவர்களுக்கும் மூச்சுவிடமுடியாதபடி தவிக்கும் நோயாளிகளுக்கும் உடனடியாகச் சிகிச்சை செய்யவே இந்த "மோபைல் யூனிட்" ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுவாசப்பை கோளாறு, இருதய ஓட்டம் நின்றுபோவது, இரத்த ஓட்டம் தடைபடுவது முதலியவைகளுக்குப் பிராணவாயுவை உடலுக்குள் பிரயோகிப்பது உடனடியான நற்பலனைத் தரக்கூடியது என்பதை வைத்திய நிபுணர்கள் அறிந்திருக்கிறார்கள். எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இந்த சாதனம் இருக்கிறது. ஆனால் பிராணவாயுப் பிரயோகத்தைஉடனடியாகச் செய்யாமல் சிறிது கால தாமதம் ஆனால்கூட நோயாளியைப் பிழைக்க வைக்கமுடியாது.

ஏற்கனவே மோசமான நிலையை அடைந்துவிட்ட நோயாளி நோயாளர் ஆஸ்பத்திரிக்கு வண்டிகளில் கொண்டு வரப்படும்போது அவர் நிலைமை இன்னும் மோசமாகி விடுகிறது. பல நோயாளர் இப்படிக் கொண்டு வரப்படும் போதே இறந்து விடுகின்றனர். மிகவும் கனமான பிராணவாயு சாதனத்தை நோயாளிகள் இருக்குமிடத்திற்குக் கொண்டு செல்வது என்பதும் இயலாத காரியம். இந்த சாதனத்தை இயங்க வைக்கவும் சிறந்த நிபுணர்கள் தேவைப்படுகின்றனர்.

இச்சாதனத்தின் விசேஷ அம்சங்களாவன: ஒரு பெரிய பெட்டியில் இதைவைத்து எடுத்துச் செல்லலாம். இதை இயங்கச்செய்ய விசேஷ நிபுணர்கள் தேவையில்லை. கற்ற நர்ஸ்கள் இதை எளிதில் உபயோகிக்க முடியும் நர்ஸ்கள் இல்லாதபோது நோயாளியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே சொல்லிக்கொடுத்தால் இதை உபயோகிக்கவும் முடியும்.

மேற்கு ஜெர்மன் செஞ்சிலுவைச் சங்கத்தின் வசம் இப்போது நான்கு பிராணவாயு அம்புலன்ஸ் வண்டிகள் இருந்து வருகின்றன. இவைகளுக்கு ஆன செலவு 25,000 ஜேர்மன் மார்க்குகளாகும். ரேடியோ சாதனத்துடன் இவை இணைக்கப்பட்டதாகும்.

இந்த சாதனங்களால் 22 லட்சம் மக்கள் கொண்ட ஜனத்தொகையினரில் மாதம் 100 பேர்களாவது பயனடைவார்கள். இதன்மூலம் செய்யப்படும் சிகிச்சைக்கு ஆகும் செலவு 35 ஜெர்மன் மார்க்குகளாகும். தேசிய சுகாதார இன்ஷூரன்ஸ் திட்டம், ஜெர்மன் செஞ்சிலுவைச் சங்கம் இவை இரண்டும் இச்செலவை பகிர்ந்து கொள்கின்றன. இப்போது உபயோகத்திலிருக்கும் சாதனங்களினால் ஏற்கனவே பலரது உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

---

## டில்லியிலுள்ள சீன தூதர்
### திருப்பி அழைக்கப்பட்டார்

கராச்சி, மே 16

இந்தியாவிலுள்ள சீன ஸ்தானிகரை சீன அரசாங்கம் திருப்பி அழைத்துள்ளது. பீக்கிங்கிலுள்ள இந்திய ஸ்தானிகர் சென்ற 11 மாதங்களுக்கு முன்னர் இந்தியாவுக்குத் திருப்பி அழைக்கப்பட்ட பின்னர் இன்னும் பீக்கிங் திரும்பவில்லை. இந்திய ஸ்தானிகர் பீக்கிங்திரும்பும் வரை சீனாவும் தனது ஸ்தானிகரை இந்தியாவுக்கு அனுப்பப் போவதில்லையென்று சீனச்செய்தியொன்று கூறுகிறது.

## சீன பாரசூட் துருப்புகள் குவிகின்றன?

காஸ்ரொக், மே 15

சிக்கியாங், திபேத் ஆகிய இடங்களிலுள்ள சகல விமானப் படை நிலையங்களிலும் சீனபராசூட் துருப்புகள் பெருமளவில் குவிந்திருப்பதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

திபேத்தின் தலைநகரான லாஷாவிற்கு 150 மைல்கள் தெற்கே டாம்ஸ்ரஸ் என்னும் இடத்திலுள்ள மத்திய திபேத்தின் அதிபெரிய படைத்தளத்தில் சோவியத் எம். ஐ. ஜி. சண்டை விமானங்களும் இலூசியன் வெடிக்குண்டு விமானங்களும், கனரக போக்குவரத்து விமானங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கிலும், மத்திய உப பகுதிகளிலும் சீனா இப்படிச் செய்வது இந்தியாவின் கிழக்குப் பகுதியிலும் பரசூட் துருப்புகளை சீனா இறக்குமென்பதற்கு அறிகுறியாகும். நிபாளஎல்லைக்கருகிலும் தங்கள் ஆக்கிரமிப்பை சீனா பலப்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது. திபேத் கலகக்காரரால் நடைபெறக் கூடிய வசதிகளைப்பற்றியும் சீனா மிகவும் கவனமாக இருக்கிறதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் காவல் புரியும் இந்திய துருப்புக்கள் எவ்வித நிலையையும் சமாளிக்ககூடியவர்களாக இருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

---

## மன்னாரில் ஹஜ் பெருநாள்

மன்னார், செவ்வாய்

இன்று நடைபெற்ற ஹஜ்ஜிப் பெருநாளையிட்டு மன்னார் மாவட்ட முஸ்லிம் மக்கள் ஆங்காங்குள்ள பள்ளிவாசல்களில் தம் தொழுகைகளைச் சிறப்புடன் ஓதிமுடித்தனர்.

## பாதுகாப்பு சபைக் கூட்டம்
### ஒத்திவைக்க கோரிக்கை

நியூயோர்க், மே 16

வியாழக்கிழமை நடைபெறவிருந்த ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கூட்டத்தை இரண்டுவார காலத்துக்கு ஒத்திவைக்க வேண்டுமென்று காஷ்மூலமாக இந்தியா கேட்டுள்ளது.

காஷ்மீர் பிரச்சினை பற்றி விவாதித்த பாதுகாப்புச்சபைக் கூட்டம் சென்ற தடவை ஒத்திவைக்கப்பட்டபொழுது சபை மீண்டும் கூடுவதற்குமுன் இந்திய பாகிஸ்தான் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை செய்யப்படுமென சபைத் தலைவர் உறுதியளித்திருந்தும் அதன்படி கலந்தாலோசனை செய்யாமல் வியாழக்கிழமைக்கு கூட்டம் நடைபெறுவதாகத் திடீரென அறிவிக்கப்பட்டதென இந்தியப் பிரதிநிதி தெரிவித்தார்.

---

## டெலிவிஷன் காட்சி

மாஸ்கோ, மே 16

சோவியத் பிரதமர் குருஷ்சேவும், அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் ஒரே சமயத்தில் டெலிவிஷனில் தோன்றிப் பேசுவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு இது உரிய சமயமல்ல என்று ஜனாதிபதி கென்னடியின் பத்திரிகைக் காரியதரிசி திரு. சாலிங்கர் இங்கு தெரிவித்தார்.

## அறிவித்தல்

விசாக் தினத்தை முன்னிட்டு 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வெள்ளிக்கிழமை விடுமுறையாதலால் சனிக்கிழமை (19-5-62)மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணி வாக்கு

மனித வர்க்கம் ஒப்புரவினல் மேம்பாடு அடைந்துவருகிறது. முன்னேற்றம் பெறச்செய்யும் சக்தி அன்பே யாகும். அன்பே மனிதனைக் காக்கும் சக்தியும் உயர்த்தும் சக்தியுமாகும்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு வைகாசி மீ 4 உ. (17-5-62)

## தொழிற் பயிற்சி

கொழும்பிலே சென்றவாரம் நடைபெற்ற தொழில் நுட்ப கல்விக் கமிஷன் முன்பாக இரு தமிழ் எம். பி.க்கள் சில முக்கியமான யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். மீன்பிடியாளர், விவசாயிகள், மரவேலை செய்வோர் இவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், எட்டாம் வகுப்பு ஆரம்பத்தில் பொது வர்த்தகக் கல்வி அளிக்கவேண்டுமென்றும் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் வற்புறுத்தியுள்ளனர்.

இத்துடன் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு தொழில் நுட்பப் பாடசாலை அமைக்கவேண்டுமென்றும், யாழ்ப்பாண தொழில் நுட்பப் பாடசாலையை சிரேஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையாக மாற்றவேண்டுமென்றும் வேறு பலவற்றையும் கேட்டுள்ளனர். இந்த முக்கிய யோசனைகளை இக்கமிஷன் எவ்வளவு தூரம் நிறைவேற்றமுடியுமென்பது இனித்தான் தெரியவேண்டும். என்ருலும் இன்று நாட்டுக்கு, இவ்வித தொழிற் பயிற்சி எவ்வளவு இன்றியமையாததென்பதை விளக்கத் தேவையில்லை

இன்று கல்லூரிகளிலிருந்தும், பல்கலைக் கழகங்களிலிருந்தும் பல ஆண்டுகள் பயிற்சி பெற்று வெளிவரும் மாணவர்களில், பெரும்பாலோரும் வெறும் புத்தகப் பூச்சிகளாகவேயுள்ளனர். அவர்கள் வாழ்க்கைப் போரில் ஈடுபட முன்வந்ததும், கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல் அவர்கள் நிலைவுள்ளது. வேலையில்லாத் கஷ்டம் மலைபோல் பெருகுகிறது. இன்று கோடிக்கணக்கான பணத்தை கல்விக்காகச் செலவிடுகிறோம். ஆனல் பயன், வருடாவருடம் பல்லாயிரக் கணக்கானவர்களை வேலையற்றோராக்குவதாகத்தான் உள்ளது. இந்த அவலநிலையால ஒருபக்கம் மனித சக்தி பாழாவதுடன், மற்றோர் புறம் நாட்டின் முன்னேற்றமும் தடைபடுகின்றது!.

இதை உணர்ந்து தொழிற் கல்வியைப் பரப்பவேண்டுமென்று பல்லாண்டுகளாகப் பலரும் வற்புறுத்தியும், அதற்கான வாய்ப்புகள் போதிய அளவு இல்லை. இடையிலே மொழி முதலிய கரடிகளை விட்டதால், மக்கள் மனமும் வேறு பக்கம் திரும்பி, நாட்டில் அமைதி குன்றியது. மற்ற விஷயங்களில் கருத்து வேற்றுமை என்ன இருப்பினும் தொழில் கல்வி அளிக்கவேண்டுமென்பதில் வேற்றுமை இருப்பதற்கில்லை. படிப்புடன் தொழிலும் கற்றுக்கொள்ளும் முறையில் மகாத்மா வார்தா கல்வித் திட்டம் அமைத்தார். அதுபோன்ற முறை இங்கும் பரவலாக அமுலுக்கு வந்தாலே ஒவ்வொருவரும் ஏதாவது தொழில் செய்து வாழவும், வேலையில்லாக் கஷ்டம் குறையவும் வழி பிறக்கும். அவ்வளவு ஏற்பாடு இங்கு அமுலுக்கு வருமா என்பது சந்தேகம். அதற்கிடையே தொழில் கல்வியைத் தனியாகவாவது கற்பிக்கவும், தமிழ் எம். பி.க்கள் கூறிய பல யோசனைகளையும் தவக்கமின்றி அமுலுக்குக் கொண்டுவரவும் கூடுமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இதே சமயம் பொதுமக்களும் அரசாங்கத்தையே நம்பி இராமல், தங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது தொழிலை சிறு வயதிலிருந்தே கற்பிக்க ஒழுங்கு செய்வது, அவர்களது எதிர்கால வாழ்வுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

# உழைப்பால் உயர்ந்த கே. ஜி. எஸ். நாயர்

— டி. எம். முருகையா —

உழைப்பால் உயர்ந்தவர்களின் வரிசையில் காலஞ்சென்ற இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு. கே. ஜி. செல்லப்பநாயரையும் சேர்த்துக் கொள்ளலாம். திரு. நாயர் 1939-ம் ஆண்டு இலங்கை இந்தியக் காங்கிரஸ் ஆரம்பமானது முதல் அதன் அரசியல் நடவடிக்கைகளிலும், தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டிருக்கிருர். புதுடில்லிக்குச் சென்ற காங்கிரஸ் தூது கோஷ்டிகளோ, அல்லது உள் நாட்டில் இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளோ, திரு. நாயர் பங்கு பற்ருமல் எதுவுமே நடந்ததில்லை.

தொழிற் சங்க ரீதியில் திரு நாயர் ஒரு போர்த்தளபதியாக விளங்கினர். அவர் கடந்த 20 வருடங்களில் நடத்திய தொழிலாளர் போராட்டங்கள் அளவற்றன. அவற்றில் சிகரம் வைத்தாற்போன்றது உருளிவள்ளிப் போராட்டம். அந்தப் போராட்டம் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் எதிரொலித்தது. திரு. நாயர் ஏராளமான வேலை நிறுத்தங்களை நடத்தி அனுபவம் பெற்றவர்.

தோட்டத் தொழிலாளரின் மத்தியில் அவருக்கு என்றுமே ஒரு உயர்ந்த ஸ்தானம் உண்டு. தொழிலாளர்களை வசப்படுத்துவதில் அவர் எவ்வளவு திறமை சாலியாய் விளங்கினரோ, அதே போல் கட்சிப் பிரசாரத்திலும் அவர் சிறந்து விளங்கினர்.

திரு. நாயர் உழைப்பால் உயர்ந்தவர். சாதாரண தையற்காரராய் இருந்து தலைமைப்பதவிக்கு வந்தவர். காங்கிரஸின் மத்திய கமிட்டியில் உயர்ந்த பதவி வகித்தபோதிலும், தமது இருப்பிடமான எட்டியாந்தோட்டைக்கு வந்தால் பழைய தொழிலை அவர் மறந்து விடுவதில்லை. தம்மிடம் வேலை செய்பவர்களுக்கு உதவியாகத் துணிகளை வெட்டிக் கொடுப்பதுண்டு. நான் தைத்துக் கொண்ட ஒரு சட்டைக்கும் அவரே துணி வெட்டிக் கொடுத்திருக்கிருர். தொழிலாளருடன் அவர் இரண்டறக்கலந்து பழகியதன் காரணமாய் அவர்களிடமிருந்து பிரிக்க முடியாதவராகி விட்டார். களனி வேலி, கேகாலை ஜில்லாக்களில் "நாயர் என்ருல் காங்கிரஸ்", அல்லது "காங்கிரஸ் என்ருல் நாயர்" என்று தான் அர்த்தம் கொள்வார்கள்.

திரு. நாயரின் தாய்மொழி மலையாளம். ஆயினும் தமிழை அவர் மலையாளத்தை விடச்சிறந்த முறையில் பேசவும் எழுதவும் செய்வார். அவரது பிள்ளைகளுக்கு மலையாளம் தெரியாது. தமிழ் தான் தெரியும்.

காங்கிரஸில் திரு. நாயரிடம் பல வருடங்கள் நான் வேலை செய்ததின் காரணமாக அவரது திறமையைக் கணிக்க முடிந்தது. அவரது பேச்சையும், எழுத்தையும் போலவே செயலிலும் அவர் வேகமும், விறுவிறுப்பும் காட்டுவார். இரவு பகலாகத் தொழிலாளிகளைப் பற்றிய சிந்தனையுடனே இருப்பார். காலை 6 மணி முதல் இரவு 2 மணிவரையும் கூட அவர் வேலை செய்து விட்டு, எழுதிய மேசை மீதே இராத் தூக்கத்தையும் முடித்து விடுவார். அவரது சுறு சுறுப்பும், உற்சாகமும் அதிசயிக்கத்தக்கது. அவருக்கு 50 வயது என யாரும் கூறமுடியாது. இளமைத் தோற்றத்துடன் போராட்ட காலத்தில் அச்சமின்றி அவர் தலைமை தாங்குவது உண்மையில் ஒரு தளபதியை ஒக்கும். அவருடைய சகாக்கள் அவரது முன் கோபத்தைக் கண்டு ஓரளவு அச்சம் கொண்டிருந்தனர்.

திரு. நாயர் ஆங்கிலம் படிக்காத போதிலும் அனுபவத்தில் அந்த அறிவைப்பெற்று அரசியல் அல்லது தொழிற் சங்க விஷயமாக வழக்கறிஞர்கள் தாயரிக்கும் நகல்களுக்கும் திருத்தம் கூறுவார். புதிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்துக் கூறுவதில் அவர் வல்லவர்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. அஸீஸ் மஸ்கெலியா பாராளுமன்றத் தேர்தலுக்குப் போட்டியிட்டபோது நானும் கட்சியின் வாக்குச் சாவடியில் கடமையாற்றினேன். அப்போது வாக்காளர்களை வசப்படுத்துவதில் திரு. நாயர் காட்டிய வாசாலகம் எத்தகையது என்பதைக் காண முடிந்தது. முன்பு குறிப்பாக ருவான்வலைத் தொகுதியில் டாக்டர் என். எம். பெரேரா வெற்றி பெற திரு நாயரே காரணமாய் இருந்தார். இந்தியர்களின் வாக்கு அவருக்குச் சென்றதற்கு அவரது முயற்சியே காரணம்.

திரு. நாயரின் மறைவினல் இலங்கை தொழிற்சங்க இயக்கம் ஒரு தீவிர தலைவரை இழந்துவிட்டது. காங்கிரஸ் அவரது பங்கை இலகுவில் ஈடு செய்ய முடியாது விஸ்வாசமுடன் அவர் தமது கடமையைச் செய்தார். அவரது மறைவினல் இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் பலவீனம் அடையுமானல் அதில் ஆச்சரியம் இருக்காது பொது வாழ்வில் இது ஒரு குறிப்பிடத்தக்க நஷ்டமாகும்.

# தமிழர்களுக்கு பெருமை அளிக்கும் இந்திய ஜனதிபதி

## அரசியல் வாதிகள் அவரது ஆலோசனையை பெறவேண்டும்

— யாத்திரீகன் —

கடந்த 13-ந் திகதி "ஈழநாடு" இதழில் இந்தியாவின் புதியஜனதிபதி டாக்டர்ராதா கிருஷ்ணனுக்கு அளிக்கப்பட்டிருந்த புகழ்மாலை அவருக்கு முற்றும் தகுதியானதே. தமிழுடன் அவருக்குள்ள தொடர்புபற்றி அதில் சரியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. உலக சரித்திரத்தில் அபூர்வமாகத் தோன்றுபவர்களில் ஒருவரான டாக்டர் ராதாகிருஷ்ணனைப்பற்றி எல்லாத் தமிழர்களும் பெருமையடைய வேண்டும். தத்துவஞானியும், ராஜதந்திரியுமான டாக்டர் ராதாகிருஷ்ணனைப் போன்றவர்கள் புராதன இந்தியாவில் ஆங்காங்கே இருந்தனர்.

பல வருடங்களுக்கு முன் டாக்டர் ராதாகிருஷ்ணனல் இயற்றப்பட்டு மகாத்மா காந்திக்குப் பரிசளிக்கப்பட்ட நினைவு மலரில் காந்திஜியை அவர் தனித்தன்மை வாய்ந்த ஒப்புவமையற்றவர் எனக் குறிப்பிட்டிருந்தார். எதிர்கால சந்ததிகள் காந்திஜியை வழிபாட்டுக்குரியவராகக் கருதுவார்கள் என்றும், உலகசரித்திரத்தில் காந்திஜியைப் போன்றவர் உயிர்வாழ்ந்திருந்தாரா என்றேஅவர்கள் அதிசயப்படுவார்கள் என்றும்டாக்டர் ராதாகிருஷ்ணன் தமது நூலில் கூறியிருந்தார். இந்த மதிப்பீடு பெருமளவில் டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கும் பொருந்தும் எனலாம்.

டாக்டர் ராதாகிருஷ்ணனை ஜனதிபதியாகக் கொண்ட இந்தியா இன்னும் மகத்தான நாடாக வளர வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். அவரது பதவிக் காலத்தில் இலங்கை - இந்திய உறவு நட்பின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனவும் விரும்புகிறோம்.

அவரது உயர்ந்த அரசியல் நடவடிக்கை மறைமுகமாக இலங்கைக்கும் நன்மை பயக்க வேண்டும் என விரும்புகிறோம். இலங்கையிலுள்ள தமிழர்களும் சிங்களவர்களும் உத்தியோகப்பற்றற்ற முறையில் அவரது ஆலோசனையைப் பெற்றுத் தங்கள் அபிப்பிராய பேதங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு இது பொன்னன சந்தர்ப்பமாகும். மனம் உண்டானல் இடமுண்டு. சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் மனஉறுதியுடன் தனிப்பட்ட முறையில் சிக்கலான பிரச்சினைகளுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணனின் சிறந்த ஆலோசனைகளைப் பெற்ருல் பல்வேறு அபிப்பிராயபேதங்களுக்கும் ஒரு முடிவு ஏற்படும்.

நமது அரசியல்வாதிகள் சரியான வழியைப் பின்பற்றுவார்களா என்பது வேறு விஷயம். ஆனல் நமது சிங்கள தமிழ், இலங்கை-இந்திய அரசியல்வாதிகள் டாக்டர் ராதாகிருஷ்ணனின் ஆழ்ந்த அறிவைப் பெற்றுப் பயனடையும்படி கடவுள் அருள வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக.

டாக்டர் ராஜேந்திரப் பிரஸாத்துக்குப் பதிலாக டாக்டர் ராதாகிருஷ்ணனை ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்காவிட்டால் அது பெருந்தவறு எனக் கூறப்பட்டது. அதேபோல் இலங்கை மக்கள் அவரது மேலான ஆலோசனையைப் பெருமல் விடுவதும் பெருந்தவருகும். டாக்டர் ராஜேந்திரப்பிரஸாத்தின் வழிகாட்டலையும் ஆலோசனைகளையும் இலங்கை மக்கள் பெறுவதும் மிகவும் பயனுள்ளது.

இந்த இரு பெரியார்களும்

(5ம்- பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

காலையிலே 'அடா', 'படா' என்று ஏதோ பாட்டுக்கூச்சல் கேட்டது. திடுக்கிட்டு படுக்கையிலிருந்து எழுந்தேன். வேறொன்றுமில்லை. பக்கத்திலே ஒரு வீட்டில் ஏதோ கல்யாணமாம். அங்கிருந்து கிளம்பிய லவுட்ஸ்பீக்கர் இன்னிசை அது; "போனல் போகட்டும் போடா. இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?" என்ற சினிமாப் பாட்டை, காதெல்லாம் துளைக்கும்படி, ஒலித்தது. இந்த உலகத்திலே ஒன்றும் நிலையில்லை என்பதை உபதேசித்தது!

சிறிது காலமாக இந்த 'லவுட்ஸ்பீக்கர் நியூஸன்ஸ்' இங்கு இல்லாமலிருந்தது. எப்படியோ மீண்டும் வந்துவிட்டது. இந்தக் கூச்சலில் ஒரு வேலையும் ஓடவில்லை. என்ன செய்யலாம். பொலிசுக்கு டெலிபோன் செய்யலாமா! பாவம் வேண்டாம். சற்று நேரம் போனதும் இந்தக் கூச்சலும் காதுக்குப் பழகி சகஜமாகி விட்டது.

* * *

ஆனல் கல்யாண சுபவேளையிலே 'போனல் போகட்டும் போடா' 'இந்தப் பூமியில் நிலையாய் இருந்தது யாரடா?' என்ற சுடுகாட்டு வேதாந்தப் பாட்டைப் பாடலாமா? அடுத்தபடி கட்டப்பொம்மன் நாடக ஒப்பாரி அழுகைப் பாட்டுகள் ஓலமிட ஆரம்பித்துவிட்டன. அட கடவுளே! அந்தத் தம்பதிகள் நன்ருக இருக்க வேண்டும்! இங்கு தமிழ்ப் பண்பாடும் கலாச்சாரமும் என்ன பாடுபடுகிறது! இதுபற்றி கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்க ஒருவர் கூட இங்கு கிடையாதா!

* * *

யாழ்ப்பாணம் உள்ளிட்டு இலங்கையிலே இப்போது பல இடங்களிலும் நல்லமழை. இரவிலே குளிர்கூட எடுக்கிறது. தெருக்களையும் சாக்கடைகளையும்கூட, சம்பளம் வாங்காமல் வருணன் சுத்தமாக்கி விட்டான்.

இப்போது நடப்பது அக்னி நட்சத்திர நாட்களாம்! வெயில் அதிகமாகக் கொளுத்த வேண்டியகாலம் இது. ஆனல் பெருமழை பெய்கிறது. இது நல்லதென்கிருர் ஒரு நண்பர். இது விபரீதமென்றும், இனி மழை காலத்தில் மழை பெய்யாமற் போய்விடுமென்றும் அஞ்சுகிருர மற்ருேர் அன்பர்.

என்னைப் பொறுத்தவரை நடப்பதெல்லாம் நன்மைக்குத்தான் என்றே கொள்ளுகின்றேன். அனுபவமும் அப்படித்தான் காட்டுகின்றது.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

— திருஞானசம்பந்தர்.

# மோட்டார் விபத்தில் 9 வயது சிறுமி மரணம்

## சாரதிக்கு ரிமாண்ட்

யாழ்ப்பாணம், புதன்

அதிவேகமாக வந்த மோட்டார் வாகனமொன்று ஒன்பது வயதுச் சிறுமியைப் பலிகொண்ட பரிதாப சம்பவம் ஒன்று கொக்குவில் பூனைரிமரத்தடியில் நடைபெற்றது. பலாங்கொடையைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுமியான மீராசாகிப் காசிம் மகள் நாகூர் உம்மாவே இவ்வாறு மரணத்துக்குள்ளானவராவார்.

மரண விசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் 'போயின்ஸ்மன்'னுகக் கடமையாற்றும் இளையதம்பி இராசையா என்பவர் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

"சம்பவம் நடைபெற்ற தினத்தன்று மாலை 3-30 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து இந்த மோட்டார் காரில் புறப்பட்டு, மாவிட்டபுரத்தில் இன்னும் நால்வரையும் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்தோம். கொக்குவிலிலுள்ள பூனைரிமரத்தடியில் இறந்த இப்பிள்ளை குறுக்கே ஓடியதைக் கண்டேன். சுமார் 35 மைல் வேகத்தில் வந்த காரை சாரதி பிறேக் போட்டு நிறுத்தினர். அதற்கிடையில் கார் பிள்ளையை மோதிவிட்டு அப்பாற் சென்று நின்றது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று அனுமதித்த சில நிமிஷங்களில் சிறுமி மரணமானர்.

வைத்தியக் கல்லூரி மாணவனை கனகரத்தினம் சதானந்தன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

"கொக்குவிலிலுள்ள எனது மாமியார் வீட்டிலிருந்தபோது கோரமான சத்தம் கேட்டு அங்கு சென்றேன். குறிப்பிட்ட கார் மிக வேகமாக வருவதை நான் பார்த்தேன். நானும் இவர்களுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்."

திருமதி ஞானபாக்கியம் பாலசுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில், தாங்கள் பிள்ளைகளுடன் அண்மையில் பலாங்கொடைக்குச் சென்று திரும்பியபோது தங்கள் பிள்ளைகளுடன் சிநேகம் கொண்ட இறந்த சிறுமி. வந்து தங்கியதாகத் தெரிவித்தார்.

காயத்தினுல் ஏற்பட்ட அதிர்ச்சியும் இரத்தப் பெருக்குமே மரணத்திற்குக் காரணமென சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வயித்தியலிங்கம் தனது வைத்திய பரிசோதனையில் தெரிவித்தார். ஈ. என். 5586 கார் சாரதியான காங்கேசன்துறையைச் சேர்ந்த காத்தான் கதிரவேலுவை இம்மாதம் 21ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறும் புலன்விசாரணை செய்யுமாறும் பொலிசாருக்கு மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

---

## குழப்பம் செய்தவருக்கு சிறை

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி தெற்கு வாசி சபாபதி சின்னத்துரை குடிவெறியால் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் குழப்பம் செய்ததாகக் குற்றம் சாட்டிப் பொலிசாரால் தொடர்ந்த வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி. குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் ஒரு மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

---

## "ஜூன் 5ல்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கள், மாணவர்கள், தமிழ்ப் பேசும் தொழிலாளர்கள் கறுப்புக்கொடிகளைத் தொங்கவிட்டு அமைதியாக ஹர்த்தால் அனுஷ்டிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவில்களிலும், தேவாலயங்களிலும் மக்கள் அன்றையத்தினம், பூஜை, பிரார்த்தனை, தொழுகைகள் நடத்தி இழந்து போன மொழியுரிமை, குடியுரிமை, அரசுரிமை ஆகியவைகளை மீண்டும் பெறுவதற்கு உறுதிபூணவேண்டும்.

---

## தமிழர்களுக்குபெருமை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மனித சமூகத்தில் உன்னதமான உயர்ந்தவர்களுக்கு உதாரணமாய் விளங்குகிருர்கள். மகாத்மாகாந்தியைப் போல் என்றுகூடச் சொல்லலாம் இவர்களைப் போன்ற பெரியார்கள் உலகுக்குக் கிடைப்பது அரிதாகும். சேற்றில் விழுந்துகிடக்கும் தற்போதைய இலங்கையின் சந்ததியினரான நாம், இப்பொன்னை சந்தர்ப்பத்தை நழுவ விடாமலிருப்போமாக.

---

## நாடற்றவர்...

(8-ம்பக்கத் தொடர்ச்சி)

திரு. எம். ஜெயராம் இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

திரு. எஸ். நாராயணசாமி. இக்கூட்டத்திற்கு தலைமை வகித்து காலம் சென்ற திரு. நாயர் தொழிலாளர் வர்க்கத்திக்கு செய்த சேவையைப் பாராட்டிப் பேசுகையில் மலைநாடு தன்னிகரற்ற ஒரு செயல்வீரரை இழந்துவிட்டது என்று கூறினர். இக் கூட்டத்தில் இரண்டு நிமிடநேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது

திரு. எம். ஜெயராம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இப் பிரச்சினையை நீடிக்க விடுவதால் தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றம் தடைப்படுகின்றது. கல்வியிலும் சமூகமுன்னேற்ற விஷயங்களிலும் 'நாடற்றவர்' என்று ஒதுக்கி வருகின்றனர். நாளடைவில் இப்பிரச்சினை கட்டுக் கடங்காத எரிமலைக் குமுறல் போல் ஆகிவிடும். ஸ்ரீ நேருவை விட இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு ஆலோசனை கூறக்கூடிய உலகத் தலைவர் வேறு யாரும் இல்லை.

---

## இடைத் தேர்தல்களில் சுதந்திரக்கட்சி

[redacted] கொழும்பு, புதன்

அநுராதபுரம், மூதூர் தொகுதி இடைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு சுதந்திரக் கட்சி அபேட்சகர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கென டெம்பிள் டிறீஸில் கூடிய மகாநாட்டில் எதுவித தீர்மானமும் செய்துகொள்ளப்படவில்லை.

வெலிமடைத் தொகுதியில் போட்டியிடும் சுதந்திரக் கட்சி அங்கத்தவராக திரு. கே. ரத்னயக்கா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மற்றைய இரு தொகுதிகளுக்கும் போட்டியிட அனுப்பிவைக்கப்போகும் சுதந்திரக் கட்சி அபேட்சகர்பற்றி கட்சியின் நியமன சபை வெகு விரைவில் தீர்மானஞ் செய்யுமெனத் தெரிகிறது.

---

## 4 தமிழ் எம். பி. ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாசலில் உள்ளே செல்ல அல்லது வெளியேவர முயன்றவர்களைத் தடுக்க முயன்றதாயும் இவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டனுயிருந்த திரு. ஸி. ஆர். ஆண்டீ கச்சேரி வாசலில் பிரவேசிக்க அல்லது வெளியே செல்லவிடாமல் தடுத்ததாயும், அரசாங்க அதிபராயிருந்த திரு. ஸ்ரீகாந்தாவை கச்சேரியைவிட்டு வெளியேற விடாமல் தடுத்ததாயும் இவர்கள்மீது மேலும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. 1961 பெப்ரவரி 20ம் தேதி மொழிப் பிரச்சினை காரணமாக மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகத்தின்போது இவ்விதம் குற்றமிழைத்ததாக அறிவிக்கப்பட்டது.

வழக்கு ஆரம்பமானபோது திரு. தர்மலிங்கத்தைத் தவிர எல்லா எதிரிகளும் பிரசன்னமாயிருந்தனர்.

திரு. வி. நாகராஜா அனுசரணையுடன் ஆஜராகிய திரு. எம. சிவசிதம்பரம் திரு. தர்மலிங்கம் மாளிகோவிலிருப்பதாயும, எதிர்பார்க்கப்பட்டபடி அவர் வந்துசேரவில்லையென்றும் கூறினர்

மாஜிஸ்டிரேட் இதை ஏற்றுக்கொண்டு, அடுத்த விசாரணையில் திரு. தர்மலிங்கம் ஆஜராகியிருக்கவேண்டும் என வழக்கறிஞரிடம் தெரிவித்தார்.

இவ்வழக்கை மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென்ற விண்ணப்பம் இன்னும் சுப்ரீம் கோர்ட்டில் இருந்து வருவதாயும் திரு. சிவசிதம்பரம் கூறினர்.

சுப்ரீம்கோர்ட்முன் இருக்கும் விண்ணப்பம்பற்றி இறுதிமுடிவு செய்யப்படும்வரை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படக்கூடாதென்ற சுப்ரீம்கோர்ட்டின் உத்தரவுக்கிணங்க, மாஜிஸ்திரேட் வழக்கை ஜூலை மாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

# மானிப்பாயில் சுகாதார வாரம்

## ஜூன் 4-ம் தேதி முதல் கொண்டாடப்படும்

மானிப்பாய், புதன்

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கேட் முதலியார் ஸி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஜூன் 4-ம் திகதி முதல் 10-ம் திகதிவரை மானிப்பாயில் சுகாதாரவாரம் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. கீழ்க்கண்ட கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டது.

கேட் முதலியார் ஸி. தியாகராஜா (தலைவர்), திரு. கே. நடராஜா, திரு. என். சொமசுந்தரம் (காரியதரிசிகள்), திரு. வி. சவரிமுத்து. திரு. ஏ. என். பொன்னையா (பொக்கிஷதார்கள்).

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கமிட்டி நியமிப்பதென முடிவுசெய்யப்பட்டு இக் கமிட்டிகளின் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இறுதித்தினத்தன்று பரிசுகள் வழங்கப்படுவதென்றும், இந்தமுறையில் சுகாதார வாரத்தைத் கொண்டாடும் பாடசாலைகளுக்கும், சிறந்த தேனீர்க்கடைகள், உணவு விடுதிகள், ரொட்டிக்கிடங்குகள், குழந்தை வைத்தியநிலையங்கள், சிறந்தமுறையில் வைக்கப்பட்டிருக்கும் மத்தியவகுப்பு வீடுகள் ஆகியவற்றுக்கும் பரிசுகள் வழங்க முடிவுசெய்யப்பட்டது.

சுகவீனத்தைக் கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள்பற்றி மக்களிடையே பிரசாரம் செய்யவேண்டிய அவசியம்பற்றி கேட் முதலியார் தியாகராஜா வற்புறுத்தினர் திரு. கே. நடராஜா வந்தனோபசாரம் கூறினர்.

---

## சிவலைப் பிட்டி வெற்றியீட்டியது

புங்குடுதீவு, புதன்

கலைவாணி வெற்றிக்கேடயத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தபால் இலாகக் கோஷ்டியும், சிவலைப்பிட்டி சனசமூக நிலையக் கோஷ்டியும் கலந்துகொண்டன. சிவலைப்பிட்டி 3 கோல்கள் பெற்றும், தபால் இலாகா ஒரு கோலேனும் போடவில்லை. திரு. எஸ். துரைச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இச்சுற்றுப் போட்டிகள் புங்குடுதீவு உதைபந்தாட்ட மைதானத்தில் நடைபெறுகின்றன.

---

## காஷ்மீர் விவாதம் ஒத்திவைக்கப்படுமா?

நியூயோர்ச், மே 16

நாளை நடைபெறவிருக்கும காஷ்மீர் விவாதத்தை 2 வாரங்களுக்கு ஒத்திவைக்கவேண்டுமென காணவும், 3 வாரத்திற்கு ஒத்திவைககவேண்டுமென இந்தியாவும் கேட்டிருப்பதாய்த் தெரிகிறது. திரு. கிருஷ்ண மேனனுக்கு இவ்வாரம் நியூயோர்க் வரச் சந்தர்ப்பம் கிடைக்காதாகையால் இந்த ஒத்திவைப்பு கோரப்பட்டுள்ளது.

---

# பூநகரியில் மர்மக் கொலை?

## ஆனல் எலும்புகள் கிடைத்தன!

யாழ்ப்பாணம், புதன்

பூநகரியில் ஓர் மர்மக்கொலை நடைபெற்றதாகக் கிடைத்த தகவலின் பேரில் யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர்களான திரு. ஜெகோரன், திரு. இரத்தி நாயக்கா ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டியொன்று இறந்தவரின் எலும்புகளையும் சாம்பரையும்தான் எடுத்துக் கொண்டது. மரணம் சம்பவித்த சில தினங்களின்பின் கிடைத்த தகவலின் பேரில் பூநகரிக்குச் சென்று இந்தப் பொலிஸ் கோஷ்டி பூநகரியிலிருந்து மூன்றரை மைல் தூரத்திற்கு தண்ணீருக்குள்ளால் நடந்து சென்று இவ்வாறு திரும்பியது.

இதுநடைபெற்ற 2 தினங்களுக்குப்பின் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவாலடனும் கட்டைக் கால்சட்டையுடன் அந்த இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

கோடரியால் அடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டபின் சடலம் புதைக்கப்பட்டிருந்ததென்றும், அதன்பின் கிடங்கிலிருந்து எடுத்துச் சுடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் நடைபெற்றது சம்பந்தமாக பொலிசாருக்குப் பல நாட்களாக எதுவித தகவலும் கிடைக்கவில்லையாம்.

சின்னத்தம்பி செல்லப்பா, சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வயித்தியலிங்கம், சப் இன்ஸ்பெக்டர் ஜெகோரன் ஆகியோர நேற்று சாட்சியமளித்தனர்.

கண்டெடுக்கப்பட்ட எலும்புகளும் சாம்பரும் வைத்திய பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. கோடரியும்மண்ணும்அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

பூநகரி நல்லூரைச் சேர்ந்த மூத்ததம்பி இரத்தினத்தின் மரணம் சம்பந்தமாக அவரது மகன் இரத்தினம் கந்தையா, மனைவி இரத்தினம் வள்ளியம்மை ஆகியோர் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் ரூபா 2000 பிணையில் செல்ல அனுமதித்த மாஜிஸ்டிரேட் மேல்விசாரணையை அடுத்த மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

# இறக்குமதியாளர்களை கண்காணிக்க ஏற்பாடு

## விலை பரிசோதனைக் குழு அமைக்கப்படும்

கொழும்பு, புதன்

விலைப் பரிசோதனைக் குழு ஒன்றை அரசாங்கம் அமைக்க உத்தேசித்திருக்கிறது. சாமான்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களைக் கண்காணிப்பது இதன் ஆலுவலாய் இருக்கும் மத்திய வங்கியின் ஆலோசனைப்படி இம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கி அதிகாரிகள், வர்த்தக, உணவு, கப்பல் போக்கு வரத்து அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் இக் குழுவில் அடங்கியிருப்பர். உள்நாட்டு இறக்குமதியாளர்கள் வரவழைக்கப்படும் பொருட்களுக்கு உலக மார்க்கெட் விலை என்ன என்பதை ஆராய்வது இக்குழுவின் அலுவலாக இருக்கும்.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, ரப்பர், தேங்காய் ஆகியவற்றுக்கு உயர்ந்த விலை கிடைக்கும் மார்க்கெட்டிலும் ஆராயப்படும் உலக மார்க்கெட்டில் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களின் விலைபற்றியும் அது தகவல் தெரிவிக்கும்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்கள் வர்த்தகத் தகவல்களை ஒழுங்காக அனுப்பிவைக்கும்படி கோரப்பட்டுள்ளன.

---

## இளம் பெண்ணுடன் பேசியவருக்கு அடி

### முகத்தில் காயம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இரு இளைஞர்களுக் கிடையே ஏற்பட்ட சண்டையினல் ஒருவர்முகத்தில் பலததகாயம் ஏற்பட்டது. இது பற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

இளம் பெண் ஒருவருடன் பேசிக்கொன்ற அந்த இளைஞனுடன் அம்பெண்ணின் சகோதரனை மற்றொரு இளைஞன் தாக்கியதால் இச் சம்பவம் ஏற்பட்டது.

---

## அல்ஜீரியாவில் நேற்று 67 பேர் பலி

அல்ஜியர்ஸ், மே 16

நேற்று அல்ஜீரியாவில் நடைபெற்ற பலாதகார சம்பவங்களில் 67 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் 61 பேர்கள் முஸ்லிம்கள்.

# ஹாலிவூட்டில் சிவாஜி கணேசன்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஹொலிவுட் வந்து சேர்ந்துள்ளார். அவர் சுமார் ஒரு வாரகாலம் ஹொலிவுட்டில் தங்குவார் என அறியப்படுகிறது. அமெரிக்காவின் திரைப்பட தலைநகருக்கு வந்திருப்பதுகுறித்து "அளவுகடந்த மகிழ்ச்சி" அடைவதாக அவர் தெரிவித்துள்ளார்.

"அமெரிக்க நடிகைகளையும் நடிகர்களையும் கண்டு பேசி அவர்களது கருத்துக்களை அறிந்துகொள்ளவும் எனது கருத்துக்களைச் சொல்லவும் ஆவலாக இருக்கிறேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க வெளிவிவகார இலாகாவின் பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் 2 மாதம் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்ய சென்றிருக்கும் இந்திய நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இன்று (வியாழன்) அமெரிக்கத் திரைப்படச் சங்கத்தின் பெரிய அதிகாரிகளைக் கண்டு பேசத் திட்டமிட்டிருந்தார். டிஸ்னிலாந்து, மெரைன்லாந்து ஆகிய இடங்களையும், திரைப்பட ஸ்டுடியோக்களையும், டெலிவிஷன் ஸ்டுடியோக்களையும் பார்வையிடுவார்.

மேற்குக் கடற்கரைக்குப் போகுமுன் அவர் கிரான்ட் கான்யான் என்னும் மாபெரும் மலையிடுக்குக் காட்சியைக் கண்டுகளித்தார். நியூமெக்சிகோ மாநிலத்திலுள்ள ஆல்புகர் நகரில் தங்கினர். டெக்சாஸ் மாநிலத்திற்கும் சென்றார். கிரான்ட் கான்யான் தேசிய பூங்காவின் மேற்பார்வையாளர் ஜான் மெக்லாவின் முக்கிய இடங்களுக்கு சிவாஜியைக் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டினர். அங்கிருந்து நடிகர் திலகம் சமவெளிகள் வழியாகவும் அரிசோனா மாநில பாலைவனங்கள் வழியாகவும் நெவாடா மாநிலத்தின் புகழ்பெற்ற சுக வாசஸ்தலமாகிய லாஸ்வேகாஸ் நகருக்கு காரில் சென்றார்.

வழியில் பௌல்டர் அணைக்கட்டையும் பார்த்தார். அது "அழகு மிக்கது" என்றும் "அமெரிக்காவின் பாக்ரா" என்றும் வர்ணித்தார். லாஸ் வேகாஸ் நகரின் மத்தியில் உள்ளப்பகட்டான ஸ்டார்ட்ஸ் ஹோட்டலை அடைந்ததும், வர்த்தக சபையினர்களும் ஹோட்டல் அதிகாரிகளும் அவரை வரவேற்றார்கள். இரவில் காசினோ பகுதியைச் சுற்றிப் பார்த்தார். காசினோவிலுள்ள நியான் விளக்குகளைக்கண்டு நியூயார்க் நகரின் பிராட்வேயைவிட காசினோ பகுதி ஒளிமயமாகத் தெரிகிறது என்றும் தெரிவித்தார்.

## சுப்பு எழுதும் கதை

கொத்தமங்கலம் சுப்புவின் கதையொன்றை கமால் பிரதர்ஸ் திரைப்படமாகத் தயாரிக்கவிருக்கின்றனர். ஜெமினி கணேசனும் சரோஜா தேவியும் பிரதம பாகத்தில் நடிக்கின்றனர். தங்கவேலு, ஜி. சகுந்தலா ஆகியோரும் இதில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

புதையல், தெய்வப் பிறவி ஆகிய வெற்றிப் படங்களைத் தயாரித்த கமால் பிரதர்ஸ் இப்புதிய படத்தின் வசனங்களை மாறன் எழுதுவார். கிருஷ்ணன்—பஞ்சு டைரக்ட் செய்வார்.

## வங்கக் கதை

பி. வின். புரடக்ஷன்ஸாரின் அடுத்தபடம் ஒரு வங்கக் கதையாகவிருக்கும்.

## மீனகுமாரி கதாநாயகி

### இந்தி 'நெஞ்சில் ஓர் ஆலய'த்தில்

தமிழில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'நெஞ்சில் ஓர் ஆலயம்' இந்தியில் தயாரிக்கப்படவிருக்கிறது. இதில் கதாநாயகியாக மீனகுமாரி நடிப்பார். ராஜேந்திரகுமார், ராஜ்குமார் ஆகியோர் நடிப்பர். இப்படம் 30 நாட்களில் தயாரிக்கப்படும்.

## சரோஜா தேவியின் புது வீடு

பிரபல நடிகை பி. சரோஜா தேவி பங்களூரில் புதிய வீடு ஒன்று கட்டியுள்ளார். சமீபத்தில் நடைபெற்ற புதுமனை புகுவிழாவில் சென்னையிலிருந்து படத்தயாரிப்பாளர் பலரும் நட்சத்திரங்களும் சென்று இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

# கலை அரங்கம்

## 'கரம்' கண்ணதாசன்!

இது என்ன விசித்திரத் தலைப்பு! கவிஞர் கண்ணதாசன் என்பதற்குப் பதிலாக, அச்சுப் பிழையா என்று மலைத்து விடாதீர்கள். சமீபத்தில் நடைபெற்ற "நெஞ்சில் ஓர் ஆலயம்" படத்தின் 100-ம் நாள் விழாவில் திரைப்படத் தொழிலைக் காரசாரமாகத் தாக்கிக் கண்ணதாசன் பேசினர். அவர் கூறியவற்றில் சில:-

### ஸ்டுடியோ படங்கள்!

சிறிய நடிகர்களைப்போட்டு ஒரு படம் வெற்றியடைந்துவிட்டால் உடனே, 50, 60 என்று புதுமுகப் படங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அவைகளில் பெரும்பாலும் ஸ்டுடியோவிற்கு வரும் படங்களே தவிர தியேட்டருக்கு வரும் படங்களல்ல.

### புத்தியும், வெற்றியும்

திரைப்பட உலகில் வெற்றியைப் பொறுத்துத்தான் புத்தி நிர்ணயிக்கப்படுகிறதே தவிர, புத்தியைப்பார்த்து வெற்றி நிர்ணயிக்கப்படுவதில்லை.

### பொலிஸ் விலாசம்

முன்னுக்குவரும் புதிய முகத்தின் இரண்டு படங்கள் வரிசையாகத் தோல்வியடைந்துவிட்டால் அவருடைய விலாசத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் பொலிஸ் நிலயத்தில்தான் விசாரிக்கவேண்டி இருக்கிறது. இந்த நிலையில்தான் இன்றைய திரைப்பட உலகம் உள்ளது.

### தயாரிப்பு தரகர்கள்

பெரிய நட்சத்திரங்களுக்கு கொள்ளை கொள்ளையாகப் பணம் வழங்கப்படுகிறது. உண்மையில் தயாரிப்பாளர்கள் பண உதவியாளர்களிடமிருந்து பணத்தை வாங்கி நடிகர்களிடம் தரும் தரகர்களாகவே இருக்கின்றனர்.

### கடற்கரை விழா

"நெஞ்சில் ஓர் ஆலயம்" 100-ம் நாள் விழாவைப்பற்றிப் பேசுகையில் இத்தகைய விழாக்களை கடற்கரையில் நடத்த வேண்டுமென்றார். காரணம் திரைப்பட உலகம் என்னும் சாகரத்தில் மூழ்கடிக்கப்படாமல் வெற்றிகரமாக 100-ம் நாள் விழா கொண்டாடக் கரைசேர்பவர்கள் வெகு சொற்பமே ஆதலால் இதை நினைவூட்ட இத்தகைய விழாக்கள் கடற்கரையிலேயே நடைபெற வேண்டும் என்றார்.

### குளோஸப் காதல்

பெரிய நட்சத்திரங்களைப் போட்டு படமெடுப்பவர்களுக்கு சதா கால்ஷீட்-தகராறு. ஆதலால் காதல் காட்சிகளில் கூட கதாநாயகனும், கதாநாயகியும் சந்திக்காமலேயே குளோஸப் காதல் செய்துவிடுகின்றனர் என்றார்.

# டாக்டரின் சேவையிலும் மனைவிக்கு சந்தேகம்!

டாக்டர் ராஜன் நர்சிங்ஹோமில் உள்ள ஆப்ரேஷன் அறை. அறுவை வைத்தியத்துக்காக ஒருவர் மயக்கமருந்து கொடுத்து படுக்கவைக்கப்பட்டிருக்கிறார். சுற்றிலும் பிரத்தியேக உடையில் டாக்டர்களும், நர்ஸுகளும் டாக்டர் ராஜனை எதிர்பார்த்தபடி நின்றுகொண்டிருக்கின்றனர். அமைதியான சூழ்நிலையில் சுவற்றுக் கடியாரம் மட்டும் டிக்... டிக்... என்று ஓசை எழுப்பிக்கொண்டிருக்க அதைத்தொடர்ந்து பூட்ஸ்சத்தம் கேட்க, டாக்டர் அறைக்குள் நுழைகிறார். படுக்கையில் இருக்கும் நோயாளியை ஒரு முறை உற்றுப் பார்க்கிறார். நீண்ட பெருமூச்சுக்குப்பிறகு "முயற்சி செய்வோம்" என்று ஆபரேஷனைத் தொடங்குகிறார்.

அறைக்குவெளியே இரண்டு சட்டைக்காரப்பெண்கள், உள்ளம் நடுங்க, உடல்நிலை கொள்ளாமல் இருக்க, கண்கள் அமைதி இழந்து, அறையின் கதவைப் பார்க்க, கதவு திறபடுகிறது. டாக்டர் கடமையின் பூரிப்போடு வெளிவருகிறார். உடனே அந்தப் பெண்கள் ஒரே தாண்டில் டாக்டரை நெருங்கி அவர் தோள்களைப் பிடித்து உலுக்கி, கதறி அவர் மீது சாய்ந்து அழுகின்றனர். டாக்டர் அவர்களைத் தேற்றி "உங்கள் தாய்க்கு ஒரு ஆபத்துமில்லை, ஆப்ரேஷன் வெற்றியாக முடிந்தது" என்று கூற அவர்கள் தங்களைமறந்து அவர் கைகளைப்பிடித்து முத்தமிட்டு ஆனந்தக்கண்ணீர் விடுகின்றனர்.

இச்சமயம் டாக்டர் தன் மனைவி ஜானகி அங்கு நிற்பதைக் கண்டு "நீ ஏன் ஆஸ்பத்திரிக்கு வந்தாய்?" என்று கேட்க, அதற்கு ஜானகி "வந்ததால்தானே உங்கள் திருவிளையாடல்களைப் பார்க்க முடிந்தது" என்று துடுக்காகப் பதில்சொல்கிறாள். இந்தச்சச்சரவுகளுக்கெல்லாம் காரணமான டாக்டரின் நெருங்கிய நண்பனும் தற்சமயம் டாக்டரின் நர்ஸிங்ஹோமில் வைத்தியம் பார்த்துக்கொள்பவருமான மகாதேவன் அங்குவந்து நொண்டிச்சமாதானம் செய்கிறார். ஒன்றும் பலிக்கவில்லை. சந்தேகம் புகைய ஆரம்பிக்கிறது. சூழ்நிலையைத் தவருகப் புரிந்துகொண்ட மனைவிக்கு விளக்கம் சொல்லமுடியாத நிலையில் டாக்டர் அசைவற்று அப்படியே நின்றுவிடுகிறார். இந்தக்காட்சி வேகமாக வளர்ந்துவரும் ராஜகோபாலன் பிலிம்ஸாரின் முதல்தயாரிப்பில் இடம்பெறுகிறது.

இதன் கதையை டைரக்ஷன் தாதாமிராசியும், வசனங்களை திரு. சக்திகிருஷ்ணசாமியும், பாடல்களை கவிஞர் கண்ணதாசனும் ஆக்குகின்றனர். இக்காட்சியில் டாக்டராக கல்யாண்குமாரும், ஜானகியாக இந்திராதேவியும், மகாதேவனாக ராதாவும் நடித்தனர்.

## காலம் சென்ற நடிகை பி. எஸ். ஞானம்

விருதுநகரிலிருந்து சென்னை வந்துகொண்டிருந்த போது கூட்டுவாஞ்சேரிக்கு அருகே ஏற்பட்ட கார்விபத்துக்குப் பலியாகிய தமிழ் நடிகை திருமதி பி. எஸ். ஞானம், நாடக உலகிலும், திரை உலகிலும் ஏறத்தாழ 25 வருடங்களுக்கு மேல் தொடர்பு கொண்டவர்.

கட்டுக் கோப்பான உடற்கட்டு கணீரென்ற தமிழ் பேசும் ஆற்றல் கொண்ட இவர், சுமார் 41 ஆண்டுகளுக்கு முன் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சியில் பிறந்தவர். சின்னஞ்சிறு வயதிலேயே நாடகக்கலையால் ஈர்க்கப்பட்ட அவர் நாடக அரங்கங்களிலே தோன்ற ஆரம்பித்தார். குறிப்பாக திரு. எம். ஆர். ராதாவின் நாடகக் குழுவில் பல ஆண்டுகள் பணியாற்றினர். நாடக மேடையில் ராதா - ஞானம் இணைபெரும் புகழைப் பெற்றது எனலாம். அவர் முதலில் நடித்த படம் 1937-ம் ஆண்டு வெளி வந்த "மைனர் ராஜாமணி"யாகும். அதன் பின் சுமார் 50 படங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

துடுக்கான பாத்திரம் அவருக்கு மிக எடுப்பாக அமைந்து பெருமை ஈந்தது. பல படங்களில கொடுமைக்காரக் குணம் படைத்தவராக வந்து அமர்க்களம் செய்துள்ளார். என்றாலும் பலவித பாத்திரங்களை ஏற்று நடிப்பதில் வல்லவர். ஆரியமாலாவில் "வண்ணாத்தி" வேடத்தில் வந்து காலஞ்சென்ற சின்னப்பாவுடன் வெடுக் வெடுக்கென்று பேசிய காட்சியை மறக்க முடியுமா? கடைசியாக அவர் நடித்து வெளிவந்த படங்கள் "கொஞ்சும் சலங்கை" "எதையும் தாங்கும் இருதயம்" அவருக்கு 4 சகோதரர்களும் 2 சகோதரிகளும் உண்டு. தற்போது அவரது மார்க்கெட் மீண்டும் சுறுசுறுப்படையும் நேரத்தில் கார்விபத்து அவரைப் பலிகொண்டு விட்டது.

# கல்யாண்குமார், மாலினி யாழ்ப்பாணம் வருகின்றனர்

தமிழ் திரைவானில் புகழேணியில் துரிதமாக முன்னேறி வரும் நடிகர் கல்யாண்குமார் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு வரவிருக்கிறார்.

ஸ்ரீதரின் 'நெஞ்சில்ஓர்ஆலயம்' படத்தின் மூலம் தமிழ்த்திரையுலகில் ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ள கல்யாண்குமாருக்கு ஒய்வில்லாமல் இப்பொழுது படப்பிடிப்புக்கள் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் களியாட்ட விழாவில் கலந்துகொள்வதற்காக நடிகர் கல்யாண்குமார் வரவிருக்கின்றார்.

நடிகர் கல்யாண்குமாருடன் 'சபாஷ் மீனா' புகழ் மாலினியும் யாழ்ப்பாணம் வருவாரெனத் தெரிகிறது.

## ஆடிப்பெருக்கு

"ஆடிப்பெருக்கு" படம் தயாரித்து முடிவடைந்து விட்டது. ஜெமினிகனேசன், தேவிகா சரோயாதேவி, ஈஸ்வர், சந்திரபாபு, எம். வி. ராஜம்மா, பி. சம்பந்தம், வித்தியாவதி, கே. வி. சாந்தி, கே. டி. சந்தானந்தம் ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் கதை வசனங்களை ஜாவர் சீதாராமன் எழுதியுள்ளார். பாடல்களை கவிஞர் கண்ணதாசன், கொத்தமங்கலம் சுப்பு, கே. டி. சந்தானம் ஆகியோர் எழுதியுள்ளனர். கே. சங்கர் டைரக்ட் செய்துள்ள இப்படத்தின் ஒழி அமைப்பு தம்பு.



ரோஜா மலர் போன்ற மிருதுவான சருமத்திற்கு

சருமத்தின் இரகசியங்களை நவீன விஞ்ஞானம் அறிந்து வைத்திருக்கிறது. ராணி சந்தன சோப்பை உபயோகித்தீர்களானல், ரோஜா மலர் போன்ற மிருதுவான சருமத்தை நீங்களும் பெறலாம். ராணி சோப், சருமத்தை ஊடுருவிச் சுத்திகரித்து சகல அழுக்குகளையும் வெளியேற்றுகிறது. பின்னர், ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் இயற்கையான எண்ணெய் வகைகள் மூலம், சருமத்தை மிருதுவாக்குகிறது. அழகின் இரகசியம் சருமத்தை ஊடுருவிச்சுத்திகரிக்கும் சோப். ராணி, இதற்கெனவே உருவான சோப்.

இன்றே எழுதி ராணி பரிசுத் திட்டப் புத்தகத்தைப் பெறுங்கள்



ராணி சந்தன சோப்

சுதேசி இண்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டெட்
தபாற் பெட்டி 21, கொழும்பு

GC/S/A

# வலிகாமம் மேற்கு தாச்சி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

வலிகாமம் மேற்கு கிராமாபி விருத்திச்சங்க சமாசத்தினால் நடாத்தப்பட்டு வரும் தாச்சி விளையாட்டுப்போட்டிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவருகின்றன,

நவாலி தென்றல் விளையாட்டுக்கழகம், மானிப்பாய் ஸ்ரீபாரதி 'ஏ', 'பி' பிரிவுக் கோஷ்டிகளையும், சுழிபுரம் தங்கராசன் கிளப்பையும் இதுவரை தோற்கடித்துள்ளது.

மானிப்பாய் கி. மு. சங்கக் கோஷ்டி, சில்லாலை கி. மு. ச. 'ஏ' பிரிவுக் கோஷ்டியைத் தோற்கடித்துள்ளது.

சுழிபுரம் தங்கராசன் கிளப் சுதுமலை விவேகானந்தா 'ஏ' பிரிவுக்கோஷ்டியைத் தோற்கடித்தது.

சுதுமலை விவேகானந்தா நவாலி தென்றல் 'பி' பிரிவுக் கோஷ்டியையும் வட்டுக்கிழக்கு சித்தன்கேணி 'பி' பிரிவுக் கோஷ்டியையும், மானிப்பாய் ஸ்ரீபாரதி 'பி' பிரிவுக்கோஷ்டியையும் தோற்கடித்தது.

வட்டுகிழக்கு சித்தன்கேணிக் கோஷ்டி அராலி தெற்கு கி. மு. ச. கோஷ்டியையும், சுதுமலை அண்ணமலைக் கோஷ்டி மானிப்பாய் கி. மு. ச. 'ஏ' பிரிவுக்கோஷ்டியையும் தோற்கடித்தன.

## கூட்டுறவுக்கு நேர்மை அவசியம்

### சாவகச்சேரி எம். பி. பேச்சு

சாவகச்சேரி, புதன்

"கூட்டுறவு இயக்கம் மக்களிடையே நல்ல முறையில் நடைபெற்றுச் சிறப்படைய வேண்டுமேயானால் இதில் ஈடுபடுபவர்கள் நேர்மை, நீதி, விடாமுயற்சி ஆகியவற்றிற்குத் தம்மை அர்ப்பணம் செய்ய வேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தென்மத்திய ஐக்கிய பண்டகசாலை வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப்பேசுகையிற் கூறினர். அவர்மேலும் கூறியதாவது:-

ஐக்கியபண்டகசாலைகள் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களாக மாறிவரும் இக்காலங்களில் மக்கள் தங்களின் வாழ்க்கையில் முன்னேற்றமடைவதற்குத் தன்னலமற்ற முறையில் இச்சங்கங்களுடன் இணைந்து சேவைசெய்யவேண்டும்.

ஐக்கிய பலநோக்குக்கூட்டுறவுச் சங்கமாக உயர்த்துவதெனக் கொண்டுவரப்பட்ட பிரேரணையும் சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பெற்றனர்.

தலைவர் திரு. வி. என். நவரத்தினம், உபதலைவர் திரு. எஸ். எஸ். அண்ணமலை, காரியதரிசி திரு. எஸ். பொன்னுச்சாமி.

## நாவலப்பிட்டி தமிழாசிரியர் சங்கம் புதிய நிர்வாகிகள்

நாவலப்பிட்டி, திங்கள்

நாவலப்பிட்டி வட்டாரத் தமிழ் ஆசிரியர் சங்க புதுவருட நிர்வாகிகள் தேர்வு விபரம் பின்வருமாறு:-

தலைவர் திரு. நா. முத்தையா, உப தலைவர்கள் திரு சி. எம். கோமஸ், திரு. கே. தங்கராசா, திரு. ஆ. சி. தில்லையம்பலம், காரியதரிசி திரு. எஸ். இராசநாயகம், உதவிக் காரியதரிசி திரு. ஜி. என். ஞானப்பிரகாசம், பொக்கிஷதார் திரு. சி. கந்தைய, கமிட்டி அங்கத்தினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புதிய தலைவர்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை விஞ்ஞான தொழில் ஆராய்ச்சி நிலையத்தின் புதிய தலைவராக பேராசிரியர் சி. சி. டி. சில்வா உள்நாட்டு கலாச்சார மந்திரியால் நியமிக்கப்பட்டிருக்கிறார். திரு. டி. பல்போர் முன்னர் இப்பதவியை வகித்தார். டாக்டர். ஏ. சுந்தரலிங்கம் உபதலைவராகத் தொடர்ந்து பதவி வகிப்பார். இவ்வாராய்ச்சி நிலயத்திற்கென 750,000 ரூபா அண்மையில் பார்லிமெண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தபால் விடுமுறை

கொழும்பு, செவ்வாய்

வெஸாக் பௌர்ணமி தினமான வெள்ளிக்கிழமையும் விடுமுறை தினமான சனிக்கிழமையும் தபாற் கந்தோர் விடுமுறை தினங்கள் என்று போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் விடுத்த அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

வியாழன் 17-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 'தக்பீர்", 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா, 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 கனகசெந்திநாதன் - பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 'கௌரவம்' – நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள். 7-30 கோவை பர்வதகுமாரி சந்திரசேகரன்-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திருப்பூந்துருத்தி வி. வெங்கடேன் - பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2–10 கோவை பர்வதகுமாரி சந்திரசேகரன் -பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 ஆர். திருஞானசம்பந்தம் - பேச்சு, 7-15 ராகம், தானம், பல்லவி தஞ்சாவூர் எம். தியாகராஜன் - பாட்டு, 8-40 திரைப்படஇசை, 9-15 சுபத்தசங்கீதம், 9–30 அகில பாரத இசை நாடக நிகழ்ச்சி.

## புத்தூர் பாடசாலை தேசிய சேவை

அச்சுவேலி, செவ்வாய்

புத்தூர் விஷ்ணு வித்தியாசாலையின் கடந்த சனிக்கிழமை பாடசாலைத் தேசிய சேவையை பிரதம உதவி ஆசிரியர் திரு. வி. செல்வத்துரை ஆரம்பித்து வைத்தார். மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலை சம்பந்தமான பல வேலைகளையும் செய்துவருகின்றனர்.

## டிலாசால் திருநாள்

மன்னர், புதன்

கிறிஸ்தவமக்களின் ஆசிரியராகவும் ஆசிரியர்களின் பாதுகாவலராகவும் விளங்கிய அர்ச். யோண் பப்டிஸ்ற் டிலாசால் என்பவரது திருநாள் மிகச்சிறப்புடன் மன்னர் சென். சேவியர்ஸ் கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

இப் புனித நாளில் அர்ச்சிய சிஷ்டவருடைய மேன்மையைச் சிறப்பிக்குமுகமாக வணக்கத்துக்குரிய சுப்பீரியர் பாலசுந்தரம் அடிகளார் சென். செபஸ்தியார் கோவிலில் பாடற்பூசையொன்றை நிகழ்த்தினர்.

இவரது மேன்மையின் ஞாபகமாக கிறிஸ்தவ பாடசாலைச் சகோதரர்கள் ஏற்படுத்திய விருந்தில் அவரது மகிமையைப்பற்றி அதிபர் பிறதர் கில்லரி யோசப், திரு. எக்ஸ் எவ். பங்கிராஸ், வண. பாலசுந்தரம் அடிகளார், திரு. வில்லியம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.


ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமோ! நெஸ்டோமோல்டில் ... மிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ... நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டும் ... மாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், ... இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடைவீர்கள் ... தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளிர்மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுவதும் உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல! ... டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில், நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

# லாவோஸில் சண்டை நின்றுவிட்டது?

## அமெரிக்க அதிகாரிகளுக்கு தகவல்

வாஷிங்டன், மே. 16

லாவோஸில் சண்டை நின்றுவிட்டதென கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிப்பதாக அமெரிக்க வெளிவிவகாரஇலாகா அதிகாரிகள் தெரிவித்தனர்.

லாவோஸில் வலது சாரிப் படைகள் தாம் இழந்துவிட்ட நாம்தா நகரைநோக்கி 15மைல் முன்னேறியிருப்பதாயும், வழியில் திரஸ்கரிக்கப்பட்டிருந்த ஒரு நகரை அவர்கள் பொறுப் பேற்றதாயும் அறிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் தாய்லாந்தில் தொடர்ந்து அமெரிக்கப் படைகள் இறங்கிவருவதாயும், அமெரிக்க ஜெட் விமானங்கள் ஏற்கனவே அங்கு இறங்கியிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. "சீட்டோ" நாடுகள் அடையாளமாக படைகளை அனுப்பவேண்டுமென அமெரிக்கா கேட்டுக்கொண்டிருப்பதாயும் கூறப்பட்டது.

ஆனல் தற்போதைய தோல்விக்கு வலதுசாரிகளே காரணம் என்றும்,எனவே லாவோசுக்கு கனடா படையனுப்ப இணங்காதென்றும் அந்நாட்டின் வெளிநாட்டு. மந்திரி கூறினர்.

## நாட்டு முன்னேற்றத்...

1ம் பக்கத் தொடர்ச்சி

பதை இராணுவத்திலிருந்து இவ்வதிகாரிகளைக் கொடுத்துதவி செய்வதன் மூலம் நிவர்த்தி பண்ணலாமென்றும் பொது மக்களில் வேலையாட்கள் இல்லாதபோதுபயிர் அறுவடை செய்வதற்கும் கரும்பு வெட்டுவதற்கும் இராணுவ வீரர்கள் உதவி செய்யலாமெனவும் பிரதமர் எடுத்துக் கூறினர்.

கடற்படையினர் துறைமுகத்தில் வழிகாட்டி வேலைகளில் உதவி புரியலாமெனவும், மீன்பிடிப் பகுதிகளைக் கண்காணிப்பதிலும், கள்ளக்குடியேற்றத்தைக் கூட இவர்கள் தடுக்கலாமெனவும் பிரதமர் தெரிவித்தார்.

இப்படி கள்ளக் கடத்தல்களைக் கடற்படை தடை செய்யலாமெனவும், இதே வகையில் விமானப்படையும் உதவி புரியலாமெனவும் விளக்கினர் திருமதி பண்டாரநாயக்கா.

## பாவனையாளர் எதிர்ப்பியக்கம்

### அதிகாரிகள் கூட்டத்தில் மந்திரிகள் வற்புறுத்து

கொழும்பு, புதன்

நாடுமுழுவதிலும் பாவனையாளர் எதிர்ப்பியக்கத்தை அபிவிருத்தி செய்வதுபற்றி நிதிமந்திரி திரு. பிலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்காவும்வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்னவும் அரசாங்க அதிபர்களிடம் வற்புறுத்தினர்கள்.

தனிப்பட்ட அரசாங்கத்துறைகளில் ஊழல்கள், கள்ள மாக்கட், கொள்ளைலாபம் ஆகியவற்றை ஒழிப்பதற்கு இந்த இயக்கம் அவசியம் என வற்புறுத்தப்பட்டது.

பாவனையாளர் எதிர்ப்பு குழுக்கள் கட்சி அரசியலிலிருந்து விலகியிருக்க அரசாங்க அதிபர்கள் வழிகாண வேண்டும் என திரு. பிலிக்ஸ் கேட்டுக் கொண்டார்.


## 'ஈழநாடு' திருவள்ளுவர் திருநாள் அனுபந்தம்

பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகள், கவிதைகளுடனும் திருக்குறள் மாநாடு, திருவள்ளுவர் திருநாள் கொண்டாட்ட விபரங்களுடனும்

18-5-62 வெள்ளிக்கிழமை வெளிவருகிறது.

12 பக்கங்கள் தனிப்பிரதி சதம் 10



## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..................

கல்லூரி ..................

எனது பெயர் ..................

விலாசம் ..................

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.


## வேலணையில் திருக்குறள் மகாநாடு

### பல அறிஞர்கள் கலந்துகொள்வர்

வேலணை, வியாழன்

வேலணையில் தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மகாநாடு நாளை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்க ஆதரவில் வேலணை அம்மன்கோவில் வீதியில அமைக்கப்பட்டுள்ள தொல்காப்பியர் அரங்கில் நடைபெறும் மகாநாட்டில் இந்தியாவிலிருந்தும் பல தமிழ் அறிஞர்கள் வந்து கலந்து கொள்வார்கள். பேராசிரியர் அ. சின்னத்தம்பி மகாநாட்டைத் தொடக்கி வைப்பார்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு வித்துவான், பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் திருக்குறள் ஏட்டுச்சுவடி தொல்காப்பியர் அரங்கத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். ஆசிரியர் திரு. ஏ, நல்லையா வரவேற்புரை நிகழ்த்துவார். மருத்துவப் பேராசிரியர் அ. சின்னத்தம்பி ஆரம்ப உரை நிகழ்த்துவார். பின்னர் திரு. எம். திருச்செல்வம் கியூ. சி. (ஓய்வு பெற்ற சட்ட அறிஞர்) கட்டுரைப் போட்டிகளில் பரிசில் பெற்றோருக்குப் பரிசில் வழங்குவார்.

'வள்ளுவருக்கு வணக்கம்' 'வள்ளுவர் வாய்மொழி' 'வாழ் வளிக்குங்குறள்' 'ஒரே ஒரு குறல்' 'வள்ளுவரும் கம்பரும்' ஆகிய பொருள்கள் பற்றி பேராசிரியை திருவாட்டி கனகசுந்தரி இளந்திரையன், பண்டிதர் அ. பொன்னுத்துரை, திரு. சூ. வி. செல்லதுரை, பேராசிரியர் சாலை. இளந்திரையன், செம்பொருட்காட்சியர் வித்துவான் திரு. ஐயன் பெருமான் கோனர் ஆகியோர் உரை நிகழ்த்துவார். இந்நிகழ்ச்சிகளில் ஒரு பகுதியை இலங்கை வானொலி ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளது.

---

## கொழும்பில் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே செல்ல முடியாது போய்விட்டதென்றும் தெரிவித்துள்ளார்கள். அப்பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டதனல் இருட்டில் வசிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டதென்றும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள்.

இந்நிலை தொடர்ந்தால் சுமார் 2,000 பேர் கஷ்டத்துக்குள்ளாகலாமென கொழும்பு நகரசபைக் கமிஷனர் பி ஏ. ஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

களுத்துறைப் பகுதியில் 23 குடிசைகளை வெள்ளம் அடித்துச் சென்றது. நாட்டின் பல பகுதிகளில் பஸ் சேவையும் பெருமழையினல் பாதிக்கப்பபட்டது. கொழும்புத் துறைமுகத்தில் வேலைகளெல்லாம் நேற்று ஸ்தம்பிதமாயின, நேற்றுப் பகலும் இரவும் ஒரு கப்பலிலும் பொருட்களை ஏற்றவோ இறக்கவோ இல்லை என துறைமுக அதிகாரிகள் அறிவித்தனர். துறைமுகத்திற்கு வெளியில் இன்னும் 6 கப்பல்கள் காத்து நிற்கின்றன.

இன்று காலை 8 மணியுடன் முடிந்த 24 மணித்தியாலத்துள் கொழும்பு ரத்மலானை அவதான நிலையத்தில் ஒன்பதரை அங்குல மழை பெய்திருக்கிறது. இது 1936-ம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு நாளில் பெய்த ஆகக்கூடியளவு மழை எனத் தெரிகிறது. நாடு முழுதும் கடும் மழை பெய்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வடபகுதியில் ஏற்பட்டுள்ள சுழல் காற்றின் காரணமாக இம்மழை பெய்கிறது. மத்துகம பட்டினம் போக்குவரத்து செய்ய முடியாதபடி வெள்ளத்தில் மூழ்கியிருந்தது,

# "நாடற்றவர் பிரச்னைக்கு தீர்வுகாண தகுந்த சமயம்"

## தோட்டக் கணக்கப்பிள்ளைகள் சங்கப் பிரதிநிதி கருத்து

நாவலப்பிட்டி, புதன்

"ஸ்ரீ நேருவின் இலங்கை விஜயத்தைப் பயன்படுத்தி பிரஜா உரிமைப் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும்.மனித உரிமை சாசனங்களுக்காகவும் பஞ்சசீலக் கொள்கைகளுக்காகவும், ஒன்றுபட்டு முயற்சித்துவரும் இலங்கையும் இந்தியாவும் நாடற்றவர் பிரச்சினையை நீடித்து வைத்திருப்பது அவர்களின் பரந்த நோக்கத்திற்கு இழுக்கு விளைவிக்கின்றது."

இவ்வாறு இலங்கை பிளான்டேசன் கணக்கப்பிள்ளைகள் யூனியன் பொதுப் பிரதிநிதி

(5-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளத்தில் மூழ்கிய பாலம்

அனுராதபுரம், செவ்வாய்

இங்கு பண்டார மாவத்தையில் மல்வத்தை ஓயாவிற்கு மேலாக அமைக்கப்பட்ட பாலம் இரண்டாவது தடவையாக வெள்ளத்தினல் அடித்துச் செல்லப்பட்டது.

---

பாணந்துறை, செவ்வாய்

பாணந்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. எப். எச். ஸேரம் அடுத்த கிழமையில் மட்டக்களப்பிற்கு மாற்றலாகிச் செல்கிறர். தன் சொந்தக் காரணமாக ஒரு சிறுவனை அடித்ததாக திரு. ஸேரம் குற்றம்சாட்டப்பட்டிருந்தார்.

## பிரான்ஸில் 5 மந்திரிகள் ராஜினமா

பாரிஸ், மே 16

பிரெஞ்சு அரசாங்கத்தைச் சேர்ந்த 5 மந்திரிகள் ராஜினமா செய்துள்ளார்கள்.

பிரெஞ்சு அதிபர் டிகாலின் ஐரோப்பிய கொள்கையை எதிர்த்தே இவர்கள் ராஜினமாச் செய்தார்கள்.


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) கிரசனட் (புத்தளம்)



ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்
எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா
பத்மினி பிரியதரிசனி
நடித்த

# இரத்தினபுரி இளவரசி

டைரக்ஷன்: ராமண்ணு

5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 திரைகளில்

சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி, நடித்த

# பாலும் பழமும்

மனேஹரா (யாழ்ப்பாணம்) நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி நடித்த அனர்கலி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.